Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-20 | 06-10-2005 | வியாழக்கிழமை | ஓசை-231

உலகில்
215 நாடுகளையும், 138 000 ஊழியர்களையும்,
50 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx Express®
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பிட
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835 (சி-12961)



## கடற்படை துணைப்படையின் பயிற்சி நிறைவில் தேசியத் தலைவருக்கு நினைவுக் கேடயம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

லெப்டினன் கேணல் மறவன் பயிற்சிப் பாசறையில் தமிழீழ கடற்படையின் துணைப்படை அணி பயிற்சி நிறைவில் நேற்று தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களுக்கு நினைவுக் கேடயம் வழங்கப்பட்டது. அத்தோடு பன்னிரு வேங்கைகள் நினைவு நிகழ்வும் இடம்பெற்றது.

லெப். கேணல் மறவன் பயிற்சிப் பாசறையில் கடற்படையின் துணைப் படையின் ஐந்தாவது அணியினர் பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர்.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை யாழ். மாவட்ட கடற்படைத் தளபதி கலாத்தன் (சலீம்) ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை கனரக பயிற்சி ஆசிரியர் யசோ ஏற்றினார். தொடர்ந்து லெப்டினன் கேணல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## -தீருவிலில் தமிழீழ கடற்படையின் -

# துணைப்படை வீரர்களின் அணிவகுப்புடன்

# பன்னிருவேங்கைகள் நினைவுநாள் நிகழ்வுகள்

## தமிழீழமெங்கும் உணர்வுபூர்வ நிகழ்வுகள்

**இந்திய – சிறிலங்கா கூட்டுச் சதியால் வீரகாவியமான பன்னிரு வேங்கைகளின் பதினெட்டாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் தமிழீழ தாயகப் பிரதேசமெங்கும் நேற்று உணர்வுபூர்வமாக மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது. வல்வெட்டித்துறை தீருவிலில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் தமிழீழ கடற்படையின் துணைப்படைவீரர்களின் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது.**

மிகவும் விசேடமான முறையில் வல்வெட்டித்துறை தீருவிலில் அமைக்கப்பெற்றுள்ள லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட பன்னிருவேங்கைகளின் நினைவுச் சதுக்கத்தில் வேங்கைகள் காவியமான மாலை 05.05 மணிக்கு ஈகச் சுடர் ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

பொது அமைப்புக்களின் பிரதிநிதி மு.தங்கவேல் தலைமையில்

(12ஆம் பக்கம் பார்க்க)





## நோர்வே பிரதிநிதிகள் புலிகளுடன் இன்று சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் நோர்வேப் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு இன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நோர்வேத் தரப்பினர் சமாதானச் செயலகத்தில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உள்ளடங்கிய குழுவினைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் தாக்குதல் முஸ்லிம் வியாபாரி பலி;

(மட்டக்களப்பு )

மட்டக்களப்பு கல்முனையில் நேற்று இரு முஸ்லிம் வியாபாரிகள் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் ஒருவர் பலியாயினார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

கல்முனை உடையார் வீதியில் நேற்றுக் காலை ஏழு மணியளவில் துவிச்சக்கரவண்டியில் வந்த இருவர் மேற்கொண்ட தாக்குதலில் யு.ஆ. வகாப்(34) என்ற வியாபாரி உயிரிழந்துள்ளார். இச் சம்பவத்தில் மற்றொரு வியாபாரியான செய்னூர்(வயது26) என்பவர் படுகாயமடைந்துள்ளார். இவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க இ.தொ.கா. முடிவு!

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நேற்று அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீடியோ கடை உரிமையாளர் உடுவிலில் சுட்டுக்கொலை!

(யாழ்ப்பாணம்)

உடுவில் பகுதியில் நேற்று முன்தினம் 9.00 மணியளவில் வீடியோ கடை நடத்தும் உரிமையாளர் ஒருவர் இனம் தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு உள்ளாகி பலியாகியுள்ளார்.உடுவில் டச்சு வீதியில் வீடியோ கடை நடத்தும் இராசரெத்தினம் இராசவிநோதன் (30-வயது) என்பவரே துப்பாக்கிச்சூட்டில் பலியானவர் என இனம் காணப்பட்டுள்ளது.

இவர்தனது கடையைப்பூட்டி

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறார்கள் சிறப்பான ஆற்றலை பல துறைகளிலும் வெளிப்படுத்தவேண்டும் என்பதே தலைவரின் அவா!

### - தாயக வீரர்கள் கௌரவிப்பில் சு.ப. தமிழ்ச்செல்வன்

சிறார்கள் கல்வி, விளையாட்டு துறைகளில் மிகச் சிறப்பான ஆற்றல்களைவெளிப்படுத்தவேண்டுமென்பதில் எமது தலைவர் பெருவிருப்பமாகவுள்ளார். இவ்வாறு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சி தூயவன் அரசறிவியல் கல்லூரியில் இடம்பெற்ற அகில இலங்கை ரீதியாக வெற்றிபெற்ற தமிழர் தாயகவீரர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; தமிழீழ தேசமென்பது கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் மிக உயர்ந்து வளர்ச்சியடைய வேண்டுமென்ற நோக்கோடு எமது தேசியத் தலைவர் அவர்களால் அதற்கான கட்டமைப்புக்கள் நிறுவப்பட்டு செயற்பட்டுவருகின்றன.

போர் நெருக்கடி தணிந்திருக்கின்ற இன்றைய சூழலில் எமது சிறார்களின் கல்வி, விளையாட்டு வளர்ச்சி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு மாகாணம்
# கேள்வி அறிவித்தல்
## நிர்மாண வேலை

01. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து அமைச்சு கேள்விச் சபைத் தலைவரினால் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட வேலைக்கு மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

02. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டடணத்தை காசாக கிருஸ்ணன் கோவில் வீதி, கிளிநொச்சியில் அமையப் பெற்ற மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டை கிருஸ்ணன் கோவில் வீதி, கிளிநொச்சியில் அமையப்பெற்ற மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து, 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ஆம்திகதி பி. ப 03. 00மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப்பத்திரங்களை (இரு பிரதிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும். அத்துடன் தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

05. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கேள்வித் தொகைக்கான கேள்விப் பிணை செயலாளர்,புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை,கட்டடங்கள், மகளிர் விவகார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம் திருகோணமலை என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விகளுடன் இணைக்கப்பட்டு தலைவர், அமைச்சு கேள்விச் சபை, புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை ,கட்டடங்கள், மகளிர் விவகார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், உட்துறைமுக வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2005 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 01. ஆம்திகதி பி. ப. 03. 00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக ஒப்படைக்கப்படல் வேண்டும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

06. வேறு விபரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| வேலைவிபரம் | கேள்விப் பிணை ரூபா | மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா | இக்ராட் பதிவுப் பத்திரம் | நிறைவேற்று எந்திரியின் முகவரி |
|---|---|---|---|---|
| பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலய மிகுதி வேலைகள் கட்டடம் III | 196,000 | 1,000 | M-5 | நிறைவேற்று எந்திரி அலுவலகம், மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிருஸ்ணன் கோவில் வீதி, கிளிநொச்சி. தொலைபேசி இல. 021-2285758 |

புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை, கட்டடங்கள்,
மகளிர் விவகார அமைச்சு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி, திருகோணமலை. (சி-13001)

வி.செ.சுவாமிநாதன்
தலைவர்,
அமைச்சு கேள்விச் சபை.



## INVITATION TO BID

**Health Infrastructure Development Program funded by World Vision Lanka for the Ministry of Health of the Democratic Socialist Republic of Sri Lanka :**

**Construction of Gramodaya Health Centers:**

1. Memorandum of Understanding between the Government of Sri Lanka and the World Vision Lanka has been signed to rehabilitate the Health Infrastructure in the areas affected by Tsunami on 26th December 2004 The United Nations Office for Project Services (UNOPS)- Sri Lanka Project Implementation Facility is providing technical services as implementation partner of the Ministry of Health and World Vision Lanka.

2. The United Nations Office for Project Services – Sri Lanka Project Implementation Facility therein after referred to as "UNOPS", invites sealed bids from eligible bidders **with ICTAD Grading M6 and above for the Construction of Gramodaya Health Centers at locations given below:**

| District | Location | Bid Bond | Bid DocumentIssues & Collection |
|---|---|---|---|
| Lot 1 Mullaitivu | 1.Kompaveli<br>2 Palinagar<br>3 Therangandal | 50,000/-<br>50,000/-<br>50,000/- | UNOPS<br>230, Thirunagar South,<br>Killinochchi<br>Tel:021 2285729 |

5. Interested bidders may submit a written application and purchase a complete set of bidding documents upon the payment of non-refundable fee of **Rs 3,000.00.** Bidding documents will be issued to eligible bidders 9.30 am to 5.00 pm on working days from **10th October 2005 to 20th October 2005** at the relevant area offices indicated above and at UNOPS-SLPIF in Colombo at 17 Park Avenue, Colombo5. **Contractors with ICTAD Grading M4 and above may submit complete Bids (Lot 1) or partial bids per Lot, provided full BOQs are submitted for each location. Contractors with Grading M5 and below can ONLY submit partial bids per Lot – i.e. individual projects only and will not be considered for packages (Lots).**

6. All bids must be accompanied by a Bid Security in the prescribed format and must be delivered to UNOPS at the relevant Area Offices indicated above before 2.00 pm on 24th October 2005. Bids will be opened immediately thereafter in the presence of bidders or their authorized representatives who choose to attend.

7. UNOPS will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation of delivery of bids.

Country Coordinator
UNOPS- SLPIF

(சி-12954)


## ஆசிரியத்துவத்தை வாழ்த்துகின்றோம்

**அகிலத்தின் மேன்மைக்கான அற்புதப் பணியாக விளங்கும் ஆசிரியத் தொழிலிற்கு உரமூட்டும் உலக ஆசிரியர் நாளான இன்றைய நன்நாளில்**

*"நின்று நிழல் பரப்பி*
*நின்றாறும் மாந்தரை - உயர்த்தும்*
*நித்திலத்தின் முத்துக்களே*
*ஆசிரியர்கள்!"*
*என இங்கிதமாய் வாழ்த்துகின்றோம்.*

**தமிழீழ மாணவர் அமைப்பு**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(6819)

## அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தினை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட முகாமைத்துவப் பட்டதாரிகளில் பட்டதாரிப் பயிற்சி நெறியில் இணைக்கப்படாதவர்கள் உடனடியாக தங்களது பட்டச் சான்றிதழ் உட்பட தங்களுடைய சுயவிபரங்களுடன் கிளி/மாவட்டச் செயலகத் திற்கு நேரில் வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தி. இராசநாயகம்,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி.**

(சி-12897)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**317 நாதன் திட்டம் விசுவமடுவைச் சேர்ந்த செல்வன்**

## பாலகிருஸ்ணன் - பாலமுரளீதரன் B.A



**புவியியல்**
**சிறப்பு பட்டம்**
**பெறும் இந்நாளில்**
**மேலும் பல பட்டங்கள்**
**பெற்றுபல்லாண்டுகள்**
**வாழ**
**வாழ்த்துகின்றோம்.**
**பிராத்திக்கின்றோம்.**

*என்றும் பிரியமுடன்*
*வாழ்த்தும்*

**சகோதரன் குடும்பத்தினர்,**
*(கவியரசன் அன்பளிப்பகம், புத்தூர்)*

(சி-12895)

## 08 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

**தாயின் மடியில்**
**11 - 06 - 1974**



**தாயக மண்ணில்**
**06 - 10 - 1997**

தமிழீழ காவல்துறை

## தலைமைக்காவலர் நிமல்ராஜ்மியஸ்

கஸ்பார்மியஸ் நிமல்ராஜ்மியஸ்

பறப்பாங்கண்டல், சிறுக்குளம்,
உயிலங்குளம், மன்னார்.

ஜெயசிக்குறு எதிர்ச்சமரில் கனகராயன்குளம், விஞ் ஞானகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்தார்.

என்னடா நண்பனே நீ எங்கு சென்றாய்
பொன்னடா அன்னைத் தமிழ் மண்விட்டு நீ எங்கு சென்றாய்
உன்னுடைய வீரம் எம்மிடம் ஏன் விட்டுச் சென்றாய்
உன்னுடைய மண்ணினை எதிரிப்படை ஏறிமிதித்திடாது காத்திடவே
இன்னமும் விடியல்லையே எழுகிறோம் உன் துப்பாக்கியுடன்
இன்னமுதம் படைத்து ஒரு அன்னைத் தமிழ் ஈழம் காத்திடவே
இன்னமும் உயிர் வாழ்கிறோம் உம்மையும் நெஞ்சினில் சுமந்தே.

(6813) **- தமிழீழ காவல்துறையினர்.**

# ரம்ழான் மாதத்தில் தீவிர தாக்குதல் அல்-ஹைதா அமைப்பு உத்தரவு

(டுபாய்)

**ரம்ழான் மாதத்தில் அமெரிக்க இராணுவப் படையினர் மீது கூடுதலாக தாக்குதல் நடத்த வேண்டுமென்று ஈராக் கைச் சேர்ந்த அல்-ஹைதா அமைப்பு உத்தரவிட்டுள்ளது.**

ஜோர்டானைச் சேர்ந்த அபு முசப் அல் ஜர்காவி என்பவர் தலைமையில் செயற்படும் தீவிரவாத அமைப்பு தங்களது இணையத் தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளது.

சொர்க்கத்தின் வாசல் திறக்கப்படுகின்ற இஸ்லாமியர்களின் புனித மாதமான ரம்ழான் நோன்பு காலம் தொடங்கிவிட்டது. மேற்கு ஆசியாவில் பெரும்பான்மையாக வசிக்கும் சன்னி முஸ்லிம்களுக்கு நோன்பு ஆரம்பமாகி விட்டது. ஷியா முஸ்லிம்களுக்கு ஆரம்பமாக வுள்ளது. புனித ரம்ழான் மாதத்தில் நமக்கு மிக முக்கியமான வேலை உள்ளது. அது ஜிகாத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பதே என்று ஈராக்கில் உள்ள அல்- ஹைதா அமைப்பு அறிவித்துள்ளது உங்கள் அனைத்து திறமை களையும் ஒருங்கிணையுங்கள் நமது வீடுகள், மசூதிகளை இடித்தவர்களையும் நமது புனித குர்ரான் புத்தகத்தை தீயிட்டு கொளுத்திய வர்களையும் கொல்லுமாறு நமது ஆதரவாளர் களையும் தூண்டிவிடுங்கள் இவ்வாறு அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

சிரியா எல்லையில் அல்-ஹைதா தீவிரவாதிகள் மீது அமெரிக்க இராணுவத் தினர் புதிதாக அதிரடித் தாக்குதல் தொடங்கியுள்ள நிலையில் இந்தச் செய்தி வெளியாகியுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.



கனடா நாட்டைச் சேர்ந்த மிஸ் யுனிவர்ஸ் நடாலிகிளபோவா தாய்லாந்து சென்று அங்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் எய்ட்ஸ் நோயாளியைப் பார்த்து ஆறுதல் கூறினார்.



புளோரிடாவில் இருந்த நியூ ஓர்லி யன்ஸிற்கு கற்றினா விற்குப் பிறகு எரிபொருள் தாங்கி ஒன்று கென்னடி எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு வந்து சேர்ந்தது.

## மொரோக்கோவில் விமான விபத்து மலைமீது மோதியதாகத் தகவல்

மொரோக்கோவின் முக்கிய சுற்றுலாத் தலங்களான மராக்கேஷில் இருந்து குவார்சசேட்டுக்கு சென்றுகொண்டிருந்த சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்தவர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை. இக்ரெம் என்ற கிராமம் அருகே விமானம் தாழ்வாகப் பறந்தபோது அங்கிருந்த மலைமீது மோதி வெடித்ததாகவும் இதில் பயணம் செய்த நான்கு சுவிஸ்பயணிகள் என்ன ஆனார்கள் என்பது தெரியாத போதும் அவர்கள் இறந்திருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

## பாலித்தீவு மீதான தாக்குதல்; அல்லாவின் எச்சரிக்கை

பாலித்தீவில் நடந்த குண்டு வெடிப்பு மக்களுக்கு அல்லா விடுத்த எச்சரிக்கை என்று சிறையில் உள்ள இந்தோனேசிய மதகுரு அபுபக்கர் பஷீர் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவில் வசிக்கும் மக்களில் பெரும்பான்மையானவர்கள் முஸ்லிம்கள். இவர்களின் மத்குருவாக உள்ளவர் அபுபக்கர் பஷீர். இவர் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வரும் ஜெம்மா இஸ்லாமியா அமைப்பின் மதத் தலைவராகவும் இருந்து வருகிறார். 2002 ஆம் ஆண்டு நடந்த குண்டு வெடிப்பில் இவருக்கு தொடர்பு உள்ளதாகக் கூறி 35 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர், இந்தத் தண்டனை 135 நாட்களாக குறைக்கப் பட்டது.

தற்போது சிறையில் உள்ள பஷீரின் அறிக்கையை அவரது உதவியாளர் ஹசீம் அப்துல்லா வெளியிட்டுள்ளார். அதில் கூறியிருப் பதாவது;

காரணம் எதுவாக இருந்தாலும், குண்டு வெடிப்பு சம்பவங்களை நான் ஆதரிக்க மாட்டேன். பாலித்தீவில் சமீபத்தில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தை கடுமையாகக் கண்டிக்கிறேன். இந்தச் சம்பவங்களில் ஒன்றும் அறியாத அப்பாவிகள் குறிப்பாக முஸ்லிம்கள் இறப்பது வேதனைக்குரியது.

அல்லாவின் சட்டத்தை பின்பற்ற வேண்டும் என்று இந்த அரசை வலியுறுத்துகிறேன். அல்லாவின் போதனைகளை நாம் முறையாக பின்பற்றவில்லை என்ற காரணத்துக்காக அல்லா விடுத்த எச்சரிக்கையே இது போன்ற சம்பவங்கள் என அவர்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை பாகிஸ்தானில் 40 தீவிரவாதிகள் பலி!

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையில் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி நியூயோர்க் நகரின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பின் ஆப்கானில் தலிபான் அரசு அகற்றப்பட்டதும் அங்கு இருந்த அல்ஹைய்தா தீவிரவாதிகளும், தலிபான்களும் பாகிஸ்தானுக்குள் ஊடுருவினர்.

அல்ஹைய்தா தலைவரான ஒசாமா பின்லேடனும் பாகிஸ்தானுக்குத்தப்பி ஓடிவந்ததாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

பாகிஸ்தானில் பதுங்கி இருக்கும் அல் ஹைய்தா தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக் கையை பாகிஸ்தான் இராணுவம் கடந்த ஆண்டு தொடங்கியது.அது முதல் தீவிரவாதி கள் இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்டு வருகின்றார்கள்.

சிறிதுகால இடைவெளிக்குப்பின் கடந்த வாரம் மீண்டும் இராணுவ நடவடிக்கை உத்வேகம் கொண்டது.

இந்த நடவடிக்கையில் 40 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்தத்தகவலை இராணுவ மேஜர் ஜெனரல் சவுக்கதசுல் தான் தெரிவித்தார். இராணுவத்தின் தரப்பில் ஏழு பேர் உயிர் இழந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

40 தீவிரவாதிகளில் பாதிப்பேர் வெளி நாட்டுக்காரர்கள் என்று கூறப்படுகிறது. இறந்தவர்களில் பிரபலமானவர்களோ தீவிரவாத இயக்கங்களுக்கு முக்கிய பொறுப்புக்களில் உள்ளவர்களோ இல்லை என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



சீனாவில் பியூஜியான் நகரில் சூறாவளியுடன் கூடிய பலத்தமழை பெய்தது. இதனால் தெருக்களில் வெள்ளநீர் பெருக் கெடுத்து ஓடியது. இதற்கிடையில் பாடசாலை மாண வர்கள் செல்லும் காட்சி.

## பாலித்தீவு தற்கொலை குண்டுத் தாக்குதல் தீவிரவாதிகளை தேடுதல் வேட்டை

(குட்டா பீச்)

இந்தோனேஷியாவின் கடற்கரை நகரமான பாலியில் நடந்த குண்டு வெடிப்பு தொடர்பாக நாடு தழுவிய தேடுதல் வேட்டையை பொலிசார் நடத்தி வருகின்றனர். இந்த வழக்குத் தொடர்பாக இரண்டு பேரிடம் விசாரணை நடந்து வருகிறது.

இந்தோனேஷியாவில் உள்ள கடற்கரை நகரமான பாலியில் கடந்த சனிக்கிழமை இரவு இரண்டு உணவகங்களில் மூன்று தற்கொலை படைத்தாக்குதல் நடந்ததில் 20இற்கும் மேற்பட்டோர் இறந்தனர். இந்த கொடூர தாக்குதலுக்கு ஜெம்மா இஸ்லாமியா தீவிரவாத அமைப்பே காரணம் எனத் தெரிய வந்துள்ளது. இந்த அமைப்பின் தலைவர்களாக செயற்படும் மலேசியாவைச் சேர்ந்த அன்சாரி பின் ஹுசேன், நூர்தீன் டாப் ஆகியோரைத் தேடி நாடு தழுவிய தேடுதல் வேட்டை நடக்கிறது இது தவிர பாதுகாப்பு பணியில் இரண்டு இலட்சம் பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து பாலி பொலிஸ் தலைமை அதிகாரி மதே மாங்கு பாஸ்திகா கூறுகையில; "அன்சாரியும்,டாப்பும் 2002 ஆம் ஆண்டு நடந்த பாலி குண்டு வெடிப்பிலும் தொடர்பு உடையவர்கள். அவர்களைத் தீவிரமாகத் தேடி வருகிறோம் இது தவிர இரண்டு பேரை பிடித்து விசாரித்து வருகின்றோம் எங்களிடம் சில தகவல்கள் கிடைத்துள்ளன விசாரணையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது" என்றார்.

இந்தோனேஷிய அதிபர் சுசிலோ பாம்பாங் குண்டு வெடிப்பு நிகழ்ந்த பாலித்தீவில் நேற்று சுற்றுப்பயணம் செய்தார். பாதிக்கப்பட்ட மக்களிடம் பேசிய அவர் குண்டு வெடிப்புக்கு காரணமானவர்களை விரைவில் பிடித்து நீதிமன்றம் முன் நிறுத்துவோம் அதுவரை அனைவரும் பொறுமையாக இருக்க வேண்டும் என்றார்.

தற்கொலைப் படைத் தாக்குதல் தான் என்பதற்கு ஆதாரமாக குண்டு வெடிப்பு நடந்த இடங்களில் சிலரது தலைகள் மட்டும் தனியாக கிடந்தன. அவற்றை புகைப்படம் எடுத்து தொலைக்காட்சிகளில் தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டு வருகிறது. மேலும் குண்டு வெடிப்பு நடந்த போது எடுக்கப்பட்ட வீடியோ காட்சிகளும் பொலிசாரிடம் கிடைத்துள்ளது தெரிவிக்கப்படுகின்றது.

## ஈராக்கில் பாதுகாப்பு நிறைந்த இடத்தில் கார்க்குண்டு தாக்குதல் மூவர் பலி; ஆறுபேர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கின் பலத்த பாதுகாப்பு நிறைந்த பகுதிக்குள் நுழைந்து தீவிரவாதிகள் கார்க் குண்டை வெடிக்கச்செய்ததில் மூன்று பேர் பலியாயினர். ஆறுபேர் காயமடைந்தனர்.

ஈராக்கில் சதாம் ஹுசேன் ஆட்சியின்போது அவருடைய அரண்மனை டைக்ரிஸ் நதியின் மேற்குப் கரைப்பகுதியில் அமைந்திருந்தது. சதாம் ஹுசேன் கைது செய்யப்பட்டு அமெரிக்க இராணுவம் ஈராக்கில் நுழைந்த பின் அப்பகுதியை அமெரிக்க இராணுவத்தினர் கைப்பற்றிக்கொண்டனர்.மேலும் அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் தூதரகங்கள் அப்பகுதியில் உள்ளன. பாதுகாப்புகள் நிறைந்த அப்பகுதிக்குள்ளேயே நுழைந்து தீவிரவாதிகள் நேற்று முன்தினம் கார் குண்டுத் தாக்குதலை நடத்தினர்.

இதில் இரண்டு ஈராக் இராணுவத்தினரும் அப்பாவி ஒருவரும் பலியாயினர். நான்கு இராணுவத்தினரும் இரண்டு பொலிசாரும் காயமடைந்தனர். முஸ்லிம்களின் புனித மாதமான ரம்ழான் மாதத்தின் முதல்நாளில் இந்தச்சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## தைவானில் பூகம்பம்

(தைவான்)

தைவானில் கடலுக்கடியில் 36 கி,மீ ஆழத்தில் பூகம்பம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் ஐந்து புள்ளிகள் பதிவாகியுள்ள இப் பூமி அதிர்வில் கட்டடங்களில் அதிர்வு ஏற்பட்டது. உயிர்ச்சேதம், பொருட்சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டது.

# நாகர்கோவில் முன்னரங்கப் பகுதியில் புலிகள் நிர்மாணப்பணிகளை செய்யவில்லை

## -போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் நாகர்கோவில் முன்னரங்கப் பகுதியில் விடுதலைப் புலிகள் எதுவித நிர்மாணப் பணிகளையும் மேற்கொள்ளவில்லை என இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது**

நாகர்கோவில் முன்னரங்கப் பகுதியில் வைத்து விடுதலைப்புலி உறுப்பினர்கள் தங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் இராணுவம் முறைப்பாடு செய்திருந்தது. அப்பகுதியில் சுமார் 15 மீற்றர் முன்நோக்கி வந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் தங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகவும் அந்த முன்னரங்கப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிர்மாணப்பணிகளையும் மேற்கொண்டு வருவதாகவும் இராணுவத்தினர் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

கடந்த 30 ஆம் திகதி முதல் செங் கற்களைக் கொண்டு அங்கு நிர்மாண நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருவதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு அமைய எந்தத் தரப்பும் எல்லைகளை விரிவு படுத்தும் பணிகளில் ஈடுபட முடியாதென இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்தது.

எனினும் இராணுவத்தினரின் முறைப்பாடு குறித்து தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

# காணாமல் போனோர் பாது.சங்க ஏற்பாட்டில் பயிற்சிப்பட்டறை

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலகத்தில்காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் ஏற்பாட்டில் பயிற்சிப்பட்டறை ஒன்று நேற்று முன்தினம் காலை ஒன்பது மணிக்கு இடம்பெற்றுள்ளது.

மன்னார் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கண்டியிலிருந்து வருகை தந்திருந்த காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் தலைவி விரிவுரைகளை நடத்தினார். இப்பயிற்சிப்பட்டறையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 75 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (18)

# முல்லையில் 77 இலட்.ரூபா செலவில் உள்ளூர் வீதிகள் புனரமைக்க ஏற்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் தங்கியிருக்கும் மக்களின் போக்குவரத்து நலன்கருதி நிகொட் திட்டத்தின் மூலம் உள்ளூர் வீதிகள் புனரமைத்துவழங்கப்படவுள்ளன.

77 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் 27 உள்ளூர் வீதிகள் இத் திட்டத்தில் புனரமைக்கப்படவுள்ள தாக முல்லை மாவட்ட நிகொட் திட்ட பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (20)

# த.தே.எழுச்சி நிகழ்வை முன்னெடுக்க சிறப்புக்குழு அமைப்பு

எதிர்வரும் 27ஆம் நாள் வவுனியாவில் நடாத்தப்படவுள்ள தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வை முன்னெடுக்கும் வகையில் சிறப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. புளியங்குளத்தில் விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் தலை மையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதன்போது வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் வெகுஜன அமைப்புக்களின் உறுப்பினர்களும் பங்கு பற்றினர்.

கடந்த யூலை 27ஆம் நாள் வவுனியாவில் வெளியிடப்பட்ட தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் எதிர்வரும் 27ஆம் நாள் தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வு நடைபெறவுள்ளமை தெரிந்ததே.

# பாண்டியன்குள மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

மல்லாவி பாண்டியன் குளம் பகுதி மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

மேற்படி பயிற்சியானது பாண்டியன்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் மல்லாவிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சி. சண்முகலிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக தமிழீழ தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் ஏற்றிவைத்தார். பொது ஈகச்சுடரினை மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ம.ஜெகு ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சிறப்புரையினை செ. முகுந்தன் நிகழ்த்தி பயிற்சியை ஆரம்பித்து வைத்தார். அப்பகுதியைச் சேர்ந்த450 இற்கும் மேற்பட்ட மக்கள் பயிற்சியை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# இடைவிலகிய மாணவர்கள் மீண்டும் கல்வி நடவடிக்கையில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, கல்குடா கல்வி வலயப் பகுதிகளிலிருந்து யுத்தம், குடும்ப வறுமை மற்றும் இதர காரணங்களால் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் 1694 பேர் மீண்டும் கல்வி நடவடிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இம்மாணவர்களுக்கு 53 பாடசாலைகளில் அவர்களுக்கான முன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு இடைவிலகிய மாணவர்களுக்கு கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொண்ட 104 ஆசிரியர்கள் அண்மையில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் வின்சன் நிறுவனத்தினால் 2002, 2003ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட ஆய்வின் பிரகாரம் கல்குடா வலயப் பாடசாலைகளில் மாத்திரம் 6235 மாணவர்கள் இடைவிலகியுள்ளமை தெரியவந்துள்ளது.

# அன்பளிப்பு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை 'எக்ஸ்' கதிர் இயக்கப்பிரிவில் பற்றாக்குறையாக இருந்த உப பொருட்களை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் வழங்கியுள்ளது. எக்ஸ் கதிர் உப பொருளான பிலிம் கெசற், மாஸ்க், ஐ பொயின்ற் லைற், பெரிய குடை என்பன அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டது.

# சிறுவர் உரிமை பற்றி கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் சர்வதேச பயிற்சி நிலையத்தின் (F.I.T) உதவியுடன் சிறுவர் உரிமைகள் தொடர்பான பயிற்சி மாலை நேர கல்வி பயிலும் மாணவர்களுக்கு கடந்த சனிக்கிழமை அன்று மாயவனூர் பொதுமண்டபத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

வட்டக்கச்சி பிரதேச இணைப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன திட்ட இணைப்பாளர் செல்வி ஜெஸ்பின் தலைமையில் 9.30 மணிக்கு அகவணக்கத்துடன் ஆரம்பமானது.

இதில் திட்டம்தொடர்பாகவும் இத் திட்டத்தில் ஒவ்வொரு சிறுவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுவதாகவும் இன்றைய அமர்வின் போது சிறுவர்களின் கடமை, உரிமைகள் தொடர்பாகவும் கலந்து ரையாடப்பட்டது.

## நல்லொழுக்கதினத்தில் உணவுப்பொருள் வழங்கல்

(வலிகாமம்)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கியுள்ளது.

சர்வதேச நல்லொழுக்க தினமான கடந்த மூன்றாம் திகதியன்று வைத்தியசாலையில் வைத்து இவ் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

பால்மா, சீனி,பிஸ்கட் போன்ற பல்வேறு வகையான உணவுப் பொருட்களே இந் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டதாக வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் செயலாளர் செ. குமரசிங்கம் தெரிவித்தார். (37)

## -கிளி.மத்திய கல்லூரி -

# வணிக மா.மன்றத்தின் பரிசளிப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மத்திய கல்லூரி வணிக மாணவர் மன்றம் நடாத்தும் மாதாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் கிளி.மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் சிறப்புற நடைபெற்றது.

கல்லூரியின் வணிக மன்றத் தலைவர் திவாகரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக தமிழீழ தேசியக் கொடியினை இசைவிழி வாணிபப் பொறுப்பாளர் மருதன் ஏற்றி வைத்தார். பாடசாலைக் கொடியினை கல்லூரி முதல்வர் ராஜ மகேந்திரன் ஏற்றிவைத்தார்.

மங்கல விளக்கினை புலிகளின் குரல் பொறுப்பாளர் . தமிழன்பன், தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் பாலகிருஸ்ணன், வணிக ஒன்றிய தலைவர் வெற்றியரசன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து வரவேற்புரையினை கல்லூரி மாணவன் குபேந்திரன் நிகழ்தினார். தொடர்ந்து சிறப்புரையினை இசைவிழிவாணிப் பொறுப்பாளர் மருதன், புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் ஆகியோர் நிகழ்த்தினர்.

அடுத்து மாணவர்களின் வினாடி வினாப் போட்டி நடைபெற்றது. அதில் வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌர விக்கப்பட்டனர்.

அத்துடன் கல்லூரியிலிருந்து வைப்பகத்தில் கணக்கு வைத்துள்ள மாணவர்களில் பத்துப்பேருக்கு குலக்கல் முறையில் 200 ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டன. அதில் தெரிவு செய்த பத்து மாணவர்களுக்குமான மொத்தப்பணத்தினை இசைவிழி வாணிபம் வழங்கியது இதனை அதன்பொறுப்பாளர் மருதம் கல்லூரி அதிபரிடம் வழங்கி வைத்தார். (கு,ச)

## -தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் -

# முன்பள்ளி ஆசிரியர்கள் திருமலையில் கௌரவிப்பு

(திருகோணமலை)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையம் சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி திருகோணமலையில் முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை திருகோணமலை நியூசில்வர் ஸ்டார் ஹோட்டலில் நடைபெறவிருக்கிறது.

. காலையில் முன்பள்ளி ஆசிரியர்கள் திருகோணமலை மக்ஹெய்சர் விளையாட்டரங்கில் இருந்து மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக நிகழ்வு நடைபெறும் இடத்துக்கு அழைத்துவரப்படுவர். தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்ட திட்ட அலுவலர் வே.கலைவர்ணன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரட்ணசிங்கம் பிரதம அதிதியாகப் பங்கு பற்றுவார். அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் சிறப்பு அதிதிகளாகப்பங்குபற்றுவர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (25)

# கல்வியை இடை நிறுத்திய சிறார்கள் இருப்பின் தகவல் தரக் கோரிக்கை

## - யாழ்.மாநகரசபை விடுத்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்- மாநகர பிரதேசத்தில் கற்கும் வயதுடைய சிறார்கள் எவராவது பாடசாலைக்கல்வியில் இணையாது இருப்பின் அல்லது பாடசாலைக்கல்வியை இடைநிறுத்தியிருப்பின் அதுபற்றி தமக்கு தகவல் தருமாறு யாழ். மாநகர சபை மக்களுக்கு கோரிக்கை விடுத்திருக்கிறது.

யாழ்-மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில கற்கும்வயதுடைய எவராவது கல்வியை இடை நிறுத்தியிருப்பின் அல்லது பாடசாலை செல்லாதிருப்பின் அவர்களை இனங்கண்டு அவர்களை பாடசாலைக்கல்வியில் இணைப்பதற்கான செயற்றிட்டம் ஒன்றை யாழ். மாநகரசபை ஆரம்பித்துள்ளது

யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவின் அனுசரணையுடன் யாழ் மாநகர சபையால் அமுல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்திற்குள் கல்வியைத் தொடராதிருக்கும் அனைத்து சிறார்களையும் உள்வாங்கும் முகமாகவே மேற்படி கோரிக்கையை விடுத்துள்ள யாழ்.மாநகரசபை

கல்வியை நிறுத்தியுள்ள சிறார்கள் பற்றி தகவல் தந்து அவர்களின் கல்விஎதிர்காலம் சிறக்க உதவுமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (33)



அழகியல் கலாமன்ற அரங்க ஆசிரியர் குழுவினரால் சென்ற 23,24,25 ஆகிய மூன்று தினங்களும் கிளிநொச்சி கருணா நிலைய மாணவர்கள் 43 பேருக்கு நாடகக் களப்பயிற்சி வழங்கப்பட்டது.

# சூழலும் கழிவுகளும்

எம்மைச் சூழவுள்ள பௌதிக வளங்களை சூழல் என்கின்றோம். பூமியின் இயற்கைச் சூழலானது கோடான கோடி ஆண்டுகள் இயற்கையாக சமநிலை சுழற்சிக்கு உட்பட்டு உயிரினம் தோன்றுதலும், விருத்தி செய்தலும் அவை சமநிலை பேணும் வகையில் அழிதலுமாக தொடர்கின்றது. இடையில் மனிதன் தனது சிந்திக்கும் ஆற்றலாலும், பரீட்சிக்கும் பண்பினாலும், பல விடயங்களைக் கண்டறிந்தான். தான்வாழ, வசதியாக வாழ, சுகமாக வாழ என பல காரணங்களைக் கூறிக் கொண்டு பல தொழில்நுட்பங்களைக் கண்டு பிடித்து துருவத்திற்கு தகிப்பையும், பூ.கோளமையத்தில் குளிர் பனிச்சாலைகளையும், ஆக்கினான். விண்ணிலும் இடம் தேடினான். மண்ணின் பாதாள ஆழத்திலும் பொருள் தேடினான். விளைவு அவன் கையருகில் இருந்த இயற்கை வளங்கள் சுருங்கின. வானக்குடை, ஓட்டையாயிற்று சூளும் கடல் உயரலாயிற்று சூழல் வெப்பம் ஏறலாயிற்று இப்போ ஓடுகிறான் கடலலையைக் கண்டு தேடுகிறான் ஓசோன் ஓட்டையடைக்கும் பொருளை மீண்டும் நாடுகிறான். இயற்கை அன்னையின் அரவணைப்பை இது முற்றிய மேற்கின் நாகரிகத்தின் நிலை. இடையில் வெம்பிய எமது வளர்முக நாகரிகம் இரண்டும் கெட்டான் நிலையில் எதைச் செய்வது எனத் தெரியாமல் அதையே செய்கிறது. அது தான் அதே பிழையும்.

என்ன பிழை?

தன் கழிவுகளை விட பல மடங்கு கழிவுகளை ஆக்குதல் அதை அடுத்த வளவிற்குள் போட்டு விட்டால் கழிவகற்றி விட்டேன் என்று நினைத்து மனம் நிறைதல் இயற்கையான மனிதக் கழிவை எங்கோ இறக்கி விட்டு ஆஹா என்ன நிம்மதி என எண்ணுதல் எனப் பல தவறுகளை செய்து கொண்டு சூழலை மாசுபடுத்திக்கொண்டு தனக்குத்தானே குழி வெட்டுவது மட்டுமல்ல மற்றவனுக்கும் குழிவெட்டுதல் பிழைதானே.

மற்றவனுக்கு குழி வெட்டுதல் எனும் போது உண்மையாகக் கூறப்பட்ட ஒரு சுவையான சம்பவம் நினைவு வருகின்றது. அண்மையில் யாழ். குடாநாட்டின் மணல் பூமி ஒன்றில் போரோய்வின் சிறு நிம்மதியில் நிறைவாக இரவு முழுவதும் தூங்கி எழுந்து தூக்கக் கலக்கத்துடன் பல் துலக்க பற்பொடியை கொட்டிக் கொண்டு முன் பக்கம் வந்து படியில் காலை வைத்து முற்றத்தில் இறங்கியவன் விழுந்தான் முகக் குப்புற ஓர் கிடங்கில் என்ன...? என்ன நடந்தது? முற்றத்தில் தானே காலை வைத்தேன் எப்படிக் கிடங்கு?... நிதானமாய் நிமிர்ந்த போதுதான் புரிந்தது முற்றத்து மணலை முதல் நள்ளிரவு யாரோ அள்ளி எடுத்து விட்டார்கள். குழி பறித்து விட்டார்கள். பாருங்கள் மற்றவனை எப்படியெல்லாம் சுரண்டமனிதன் விளைகிறான் என்பதை. இந் நிலையில் தான் கழிவுகள் என்பதன் வரைவிலக்கணத்தைப் பார்ப்போம். கோடீஸ்வரனுக்கு ஒரு நாள் உடுத்த உடை கழிவு இலட்சாதிபதிக்கு சில நாள் உடுத்த உடை கழிவுசாதாரண ஒருவனுக்கு கிழிந்த உடை கழிவு ஏழைக்கு மானத்தை மறைக்க முடியாத கந்தல் கழிவு. ஆக ஒருவனால் தன்னால் பயன்படுத்தமுடியாத பொருள் கழிவாகின்றது. இவ்வாறு பயன்படாத பொருட்கள் அல்லது கழிவுகள் பெருக பல காரணங்கள் உள.

திட்டமிடப்படாத வாழ்வு அளவிற்கதிக ஆசை, செயற்கையை நாடும் வாழ்வு, இவற்றின் விளைவு, கழிவு , கழிவு, கழிவு கழிவு கூடும் போது இச் சூழல் அசிங்கமாகின்றது. கழிவிலேயே வாழும் உயிர்கள் பெருகுகின்றன. சூழல் வெப்பநிலை, இரசாயனநிலை உட்பட நிலம், நீர், காற்று, ஆகாயம் என அனைத்தும் மாசுபடுகின்றன. அப்படியானால் கழிவை எப்படி அகற்றலாம். அல்லது சூழலை மாசுபடுத்தாமல் தவிர்க்கலாம்.

1. இயற்கையோடு இணைந்த எளிய வாழ்வைத் திட்டமிடுவோம். இதில் நாம் உண்ணும் உணவிலிருந்து பாவிக்கும் பொருட்கள் அனைத்தும் சூழலை மாசுபடுத்துகின்றதா என ஆராய்ந்து பார்த்து தெளிவோடும், பொறுப்போடும் ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும்.

2.ஒவ்வொருவரும் தன்னால்/ தம்மால் ஏற்படுத்தப்படும் கழிவுகளை தாமே சேர்த்து அகற்ற ஆவன செய்ய வேண்டும். கழிவுகளை அங்கிங்கு வீசாமல் உரிய இடங்களில் சேகரிக்கும் வகையில் செயற்பட வேண்டும்.

3. சேகரிக்கப்படும் கழிவுகள் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்டு மீள் பாவனைக்கு உட்படுத்த ஆவன செய்யப்பட வேண்டும்

4. திரவக் கழிவுகளும் அவ்வாறே உரிய முறையில் அகற்றப்பட வேண்டும்.

**திண்மக் கழிவகற்றல்.**

1. கிராமங்களில் உக்கும் தன்மையுள்ள குப்பைகள் கூட்டெருவாக்கல் மூலம் மீள் பாவனைக்கு உள்ளாக்கப்படல் வேண்டும்.

2. சேரும் சிறிதளவு உக்காத பொருட்கள் சேகரிக்கப்பட்டு மீள் சுழற்சிக்குள்ளாக்கப்படல் வேண்டும். இங்கு திரவக் கழிவுகள் ஆழமற்ற நிலத்தடிக்குழிக்குள் பாதுகாப்பாக விடப்பட்டு இயற்கை அழிதலுக்கும் உறிஞ்சுதலுக்கும் வழி கோலப்படல் வேண்டும்.

நகரங்களில் நிலத்தின் கீழ் புதைத்தல் அல்லது கூட்டெரு தயாரித்தல் என்பன ஒவ்வொருவராலும், இயலாதது. எனவே பொதுச் சுகாதார திண்மக் கழிவகற்றல் நடைமுறைகளை பொது மக்கள் கையாள வேண்டும் அவ் வகையில் கழிவுகளை சேகரிக்க நெகிழும் பொலித்தீன் பைகள் வடி வமைக்கப்பட்டு ஒவ்வோர் வகைக் கழிவுக்கும் நிறக் குறியீடு வழங்கப்பட்டு கழிவுகள் சேக ரிக்கும் முறையே பாதுகாப்பானதும், நிரந்தரத் தன்மையானதும், இலகுவானதும், என இனங்காணப்பட்டுள்ளது. எனவே இம் முறை தமிழீழத்தில் கிளி.நகரில் பரீட் சார்த்தமாக நடைமுறைப் படுத்தப்படுகிறது. இதன்போது உக்கும் குப்பைகள் அல்லது கழிவுகள் கரிய நெகிழும் பைகளில் தினசரி அப்புறப்படுத்தப்படு கின்றன. பிளாஸ்ரிக் பொலித்தீன் கழிவுகள் நீலப்பைகளில் பை நிரம்பிய பின் அப்புறப் படுத்தப்படுகின்றன. தொற்றை ஏற்படுத்தக் கூடிய கழிவுகள் தினசரி மஞ்சள் நிறப்பைகளில் அகற்றப்படுகின்றன. இச் செயற்பாட்டின் மூலம் குப்பைகள் வீசப்படுவது குறைக்கப்படும் எனவும் தாமே சேகரிக்கும் போது கழிவுகள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படும் எனவும் கழிவகற்றலில் அனைவரும் வலிந்து செயற்படும் வாய்ப் பினால் சுத்திகரிப்பு தொழிலாளர்களின் வேலைப்பளு குறைவதுடன் அதிக பிரதேசத்தை துப்புரவாக பேண முடியும் என்றும் இல்லாமல் ஈ பெருக்கத்தை குறைக்க முடியும் எனவும் எதிர்பார்க் கப்படுகின்றது.

அவ்வாறே பெருமளவு திரவக்கழிவு வெளியேறும் நிலையங்களில் நிலத்தின் கீழான கிருமியழிப்புத் தொட்டி முறையைப் பயன்படுத்துவதன் மூலம் கழிவு நீர் நிலத்தடி நீரை மாசுபடுத்தாவண்ணம் பேணுவதுடன் அக் கழிவு நீர் மணமற்ற சூழலை பாதிக்காத மீள் பாவனைக்குகந்த நீராக மாற்றமடைந்து மீள் பாவனைக்கு உட்படுத்தலாம். எனவே மேற்படி இருவகை கழிவகற்றல் முறைகளும், தற்காலிக பாதுகாப்பை வழங்குவதாக அமைகின்றது.

இச் செயற்பாடுகளின் விருத்தியினால் உரம், கடதாசி, பிளாஸ்ரிக் பொருட்கள், இரும்புப்பொருட்கள் கண்ணாடிப்பொருட்கள் என்பனவற்றை மீள் பயன்பாட்டு முறைகளில் தயாரிக்கவும் சூழலைப் பாதுகாக்கவும், முடியும் என்பதுடன் தேவைப்படும் போது நகரக் கழிவு நீர் தொகுதி அமைக்கப்பட்டு மீள் பாவனையையும் மேம்படுத்த முடியும்.

மேலும் ஆலைக் கழிவுகள் புகைகள் என்பனவும் எண்ணெய் கழிவுகளும் உரிய சிகிச்சை முறைக்கு உட்படுத்துவதன் மூலம் சூழல் பாதிப்பைக் குறைக்கலாம்.

பணி[illegible]ளர்,
தமி[illegible] சுகாதார சேவைகள்,
[illegible]ம்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ்.மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க உலக வங்கி முன்வர வேண்டும்

## யாழ். மாவட்ட அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உலக வங்கியின் வடக்கு கிழக்கு வீடமைப்புத்திட்டத்தின் கீழ் நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட வேண்டும். என்று யாழ். அரச அதிபர் கே.கணேஷ் உலக வங்கி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த உலக வங்கியின் புனர்வாழ்வு புனரமைப்புத் திட்ட அதிகாரிகளை யாழ்.அரச செயலகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடிய போதே அரச அதிபர் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சுனாமியால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பொறுப்பை பல்வேறு தொண்டர் நிறுவனங்கள் ஏற்றுக்கொண்ட நிலையிலும்- இன்னும் நூற்றுக்கணக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான பொறுப்பை எந்த ஒரு நிறுவனமும் ஏற்றுக்கொள்ளாத நிலைமை காணப்படுகிறது.

இதனால் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வீடமைப்புத்திட்டத்துள் உள்வாங்கப்படாது பாதிக்கப்படுகின்ற அபாயகரமான சூழ்நிலை காணப்படுகின்றது என்பதைச்சுட்டிக் காட்டியுள்ள யாழ்-அரச அதிபர். பொறுப் பேற்கப்படாத வீடுகளை அமைப்பதற்கான உதவிகளை உலகவங்கி வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். (33)

# மக்கள் வங்கி சங்கானைக் கிளையின் நடமாடும் சேவை

(வலிகாமம்)

மக்கள் வங்கியின் சங்கானைக் கிளை, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணி தொடக்கம் மாலை நான்கு மணிவரைக்கும் விசேட நடமாடும் சேமிப்பு சேவை ஒன்றை நடாத்தவுள்ளது.

மக்கள் வங்கி ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து 30ஆம் திகதி வரையானஒரு மாத காலத்தை சேமிப்பு மாதமாகப்பிரகடனப்படுத்தியதையடுத்தே இந்த நடமாடும் சேமிப்பு சேவை நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேமிப்புச்சேவையானது மக்கள் இருக்கும் இடங்களை நாடிச்சென்றுஅதாவது அவர்கள் செறிந்து வாழும் இடங்களுக்கு அருகிலுள்ள பாடசாலைகள், சனசமூக நிலையங்களில் நடத்தப்படும்போது சேமிப்பின் முக்கியத்துவத்தை உணரும் மக்கள் சேமிப்பை செய்து கொள்ள வசதியாக இருக்கும் என்று மக்கள் வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை தெரிவிக்கின்றார் (37)

# மனித உரிமை மீறல் சம்பவங்கள் யாழ்.மாவட்டத்தில் அதிகரிப்பு

## - இல ம.உ ஆணைக்குழு அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் திடீரென அதிகரித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.மாவட்டப்பொறுப்பதிகாரி ரோகித பிரியதர்சன தெரிவித்துள்ளார்.

அந்த அடிப்படையில் கடந்த மாதத்தில் மாத்திரம் 414 மனித உரிமை மீறல் சம்பவங்கள் யாழ். மாவட்டத்தில் நிகழ்த்துள்ளன என்றும்- இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதில் அதிகளவிலானவை சிறுவர் துஷ்பிரயோகம், அதிகார துஷ்பிரயோகம்,கல்வி உரிமை மீறல் போன்ற உரிமை மீறல் பிரச்சினைகளாகவே காணப்படுவதாகவும் குறிப்பிட்ட அவர்,

இது விடயத்தில் அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்றும் கூறினார். (33)

# சுகாதாரத் தொண்டர்களுக்கான நிவாரணத்தை உலக உணவு ஸ்தாபனம் வழங்கவில்லை

## தொண்டர்கள் கவலை

(வலிகாமம்)

யாழ். மாவட்டத்தில் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமை யாற்றுவோர்களுக்கான இலவச உலர் உணவு நிவாரணப் பொருட்கள் கடந்த ஆறு மாதங்களாக வழங்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் சுமார் 1500 பேர் வரையில் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றுகின்றனர். இவர்களுக்கு உலக உணவு ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. கடந்த ஆறு மாத காலமாக இந் நிவாரணம் நிறுத்தப்பட்டிருப்பதாகச் சுகாதாரத் தொண்டர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கடந்த காலங்களில் ஐந்து கட்ட உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டிருப்பதாகவும், தெரிவிக்கும் தொண்டர்கள் கடந்த ஆறு மாதத்திற்குமான நிவாரணத்தை வழங்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கின்றனர். (37)

# யாழ். குடா நாட்டில் வரட்சி விவசாயச் செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடுமையான வரட்சி நிலவிவருவதால் அங்கு விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பருவகால மழை பெய்ய வேண்டிய காலம் வந்துவிட்ட நிலையிலும் யாழ். குடாநாட்டில் இன்னமும் பருவ மழை பெய்யத்தொடங்க வில்லை இதனால் இங்கு கடுமையான வெப்பநிலை நிலவுகிறது.

இந்நிலைமை காரணமாக பருவகால மழையை நம்பி பயிர்ச் செய்கையில் ஈடுபடும் யாழ்.குடாநாட்டு விவசாயிகள் தமது ப்யிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாத நிலையிலுள்ளனர்.

இதனால் இவர்களின் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள துடன் விவசாயக் குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (33)

# சிங்கள இனவாதிகளும் சிறிலங்காவின் எதிர் காலமும்

*ராவய ஒக்டோபர் இரண்டாம் திகதி சிங்கள நாளிழில் வெளியான இக்கட்டுரையை எழுதியவர் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் டெரன்ஸ் புரசிங்க மொழியாக்கம்:– அ. சக்திவேல்*

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசியல் கைதியாக இருக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார். தனது கட்சியின் கொள்கைகளை புறக்கணித்து விட்டு தான் எப்படியும், இந்த நாட்டின் சனாதிபதியாக வேண்டும் என்ற நோக்கத்துடன் பௌத்த இனவாதிகளான ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய கட்சிகளுடன் அவர் இணைந்துள்ளார். அதில் அடங்கியுள்ள கோரிக்கைகள் இந்த நாட்டின் எதிர்காலத்தை எப்படிப் பாதிக்கும் என்பதை நாங்கள் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினை தீர்விற்கு முடிவு காண்பதே தற்போதைய அரசின் கொள்கையாகும். ஆனால் பேரினவாத பௌத்த அமைப்புகளினால் இவைகள் யாவும் புறம் தள்ளப்பட்டு இன்று சிறுபான்மை இன மக்கள் அரசியல் ரீதியில் புறம் தள்ளப்பட்டுள்ளார்கள். இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் முன் வைக்காதபடியால் இன்று இனப்பிரச்சினை இடியப்ப சிக்கலாக மாறியுள்ளது. எனவே, இன்று நாட்டி லுள்ள இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதை நாங் கள் வரவேற்கின்றோம்.

1994 ஆம் ஆண்டு பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவி இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை ஏற்படுத்தப் போகின்றேன் எனக்கூறி சிறுபான்மை இனத்தவர்களினதும் பெரும்பான்மை சிங்கள இனத்தவர்களின் வாக்குகளைப் பெற்று சனாதிபதியாக மேடை ஏறினார். இதற்காக சிங்கள பெரும்பான்மை இனத்தவர்களின் ஆசீர்வாதமும் அம்மையாருக்கு கிடைத்தது. ஆனால் பொதுசன ஐக்கிய முன்னணி அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணவில்லை விடுதலைப்புலிகளுடன் நிரந்தர சமாதானத்தை இவர்கள் ஏற்படுத்திக்கொள்வதில் பெரும் தோல்வியைத் தழுவிக்கொண்டார்கள். மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி 2002 ஆம் ஆண்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வை காண்போம் எனக்கூறி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப் பீடம் ஏறினார். அவர் ஒரு நன்மையை செய்தார் அதாவது விடுதலைப்புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் இடையில் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்து கொண்டார்.



நாட்டில் சமாதானத்தை முன்னெடுப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் அரசு முழு முயற்சிகளையும், செய்தது. இதை இந் நாட்டு மக்கள் மறக்க மாட்டார்கள். சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்திற்கு அடி பணியாமல் விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தை செய்து கொண்டார். போர் நிறுத்தம் இந் நாட்டின் சமாதானத்திற்காகவே மேற்கொள்ளப்பட்டது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் தலையீடுகள் இல்லாமல் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் ரணில் முழு மூச்சுடன் ஈடுபட்டார்.

1994 ஆம் ஆண்டு இந்த நாட்டில் தெளிவான அரசியல் நிலவரம் ஏற்பட்டது. அதாவது யுத்தத்திற்கு முடிவு கட்டி நாட்டில் கொழுந்து விட்டெரியும், தேசிய இனப்பிரச்சினைக்கு முடிவு கட்டுவதற்கு சிங்களப் பெரும்பான்மை மக்கள் சந்திரிகாவுக்கு வாக்களித்தனர். ஆனால் சிங்களப் பேரினவாத சக்திகளான ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய இந்த இரண்டு கட்சிகளும் தேசிய பிரச்சினையை யுத்தம் மூலமாக தீர்த்து வைக்க வேண்டும் என்ற கொள்கையை கடைப்பிடித்தன. ஜாதிக ஹெல உறுமய பிக்குமார்கள் இந் நாட்டில் தர்மராஜ்யத்தை ஏற்படுத்தவேண்டுமானால் அதற்கு யுத்தத்தை தவிர வேறு வழியில்லை என்பதையே அவர்களின் அரசியல் நகர்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. மேலும் இதற்கு பசளை இடுவதற்கு ஜே.வி.பி பக்கத்துணை நின்று அதற்கான ஆசீர்வாதங்களையும், வழங்கிய வண்ணம் உள்ளது. எதிர்வரும் சனாதிபதித் தேர்தலைக் குறிவைத்து சிங்கள பௌத்த இனவாதத்தை முன்வைத்து மீண்டும் ஒரு யுத்தத்[illegible] இந்த நாட்டில் ஏற்படுத்தி அழிவிற்குள் [illegible]ளும் சதி முயற்சிகளை ஜே.வி.பி, ஜாதிக ஹெ[illegible]ல உறுமய ஆகிய கட்சிகள், மேற்கொண்டு வருகின்றன. இது இந்த நாட்டிற்கு மாபெரும் துரதிஷ்டமாகும். இதற்கு மகிந்த ராஜபக்ஷவை அரசியல் பகடைக்காயாக தற்பொழுது அவர்கள் பயன்படுத்தி உள்ளனர். ராஜபக்ஷவும் இனவாதபடுகுழியில் வீழ்ந்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளருக்கு 12 கோரிக்கைகளை இந்த இனவாத இரண்டு கட்சிகளும், முன் வைத்துள்ளன. அதாவது விடுதலைப் புலிகளுடன் மகிந்த ராஜபக்ஷ பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமானால் அவர்கள் தமது ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்துள்ளது. அப்படி இல்லாவிட்டால் விடுதலைப்புலிகளை யுத்தத்தினால் தோற்கடிக்க வேண்டும் அவர்கள் இதற்கு உடன்படமாட்டார்கள். சனாதிபதிக்கு ஆதரவு திரட்டும் பொதுக்கூட்டம் ஒன்றில் அமைச்சர் மங்கள சமரவீரவும் ஜே.வி.பி தலைவர் சோமவன்சவும், இந்த நாட்டில் இராணுவம் எல்லைகளை முறையாக பாதுகாக்க முடியாவிட்டால் இராணுவத்தைக் கலைத்து விட வேண்டும். எனக்கூறியுள்ளனர். இதன் அர்த்தம் மீண்டும் இராணுவத்தை புலிகளுடன் மோதவிட்டு யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பதே இவர்களின் பிரச்சாரமாக அமைத்துள்ளது. சில வேளைகளில் மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டில் சனாதிபதியானால் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய இரண்டு கட்சிகளின் நிபந்தனைகளின் படி இவர் யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டிய கட்டத்திற்கு தள்ளப்படுவார். இது நாட்டில் மாபெரும் இரத்தக் களரியை மீண்டும் ஏற்படுத்தும்.

இந்த நாட்டில்போர் நிறுத்தத்தை இராணுவம் முறையாகக் கடைப்பிடித்து வருகின்றதென்றும்,விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறிச் செயற்படுகின்றார்கள் என தற்போது அரசாங்கம் நினைக்கின்றது போரை முடிவுக்கு கொண்டு வருவதற்குப் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. 2003 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நேரடிப் பேச்சுவார்த்தை இடை நிறுத்தப்பட்டது. ரணில் ஆட்சியின் பொழுதே இது ஏற்பட்டது. மீண்டும் இடை நிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ரணிலின் அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் பொழுது ரணிலின் ஆட்சி சந்திரிகாவினால் கலைக்கப்பட்டு 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்றது. பின் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு சந்திரிகா அரசு இதுவரை எந்த முடிவுகளையும் எடுக்கவில்லை. அதனால் சமாதான முன்னெடுப்பு இந்த நாட்டில் ஒரு கேலிக்கூத்தாக மாறி சமாதானம் மழுங்கடிக்கப்பட்ட நிலையிலுள்ளது. ஆயுதம் ஏந்தி இனத்திற்காகப் போராடும் ஒரு இயக்கத்தை ஆயுதங்களை கீழே வைத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வாருங்கள் எனக் கூறுவது இலகுவான காரியம் அல்ல. அவர்கள் தங்களின் ஆயுதங்களை கீழே வைப்பார்களானால் அரச தரப்பில் பல விட்டுக்கொடுப்புகளை அமுல்படுத்த வேண்டும் இது அதியுயர் பீட மட்டம் முடிவெடுக்க வேண்டும். எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வென்றால் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்வேன் எனக் கூறியுள்ளார். இது நாட்டை மீண்டும் ஒரு யுத்தத்திற்கு தயார்படுத்தும் செயலாகும். இது மிகத் தெளிவாக தெரிகின்றது. மீண்டும் ஒரு யுத்தம் இந்த நாட்டில் ஏற்பட்டால் வடக்கு கிழக்கு மட்டும் அழியும் என சில பிற்போக்கு சக்திகள் நினைக்கலாம். ஆனால் வடக்கு கிழக்கை விட தெற்கு மிகவும் பாதிக்கப்படும் என்பதை எல்லோரும் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.



தற்பொழுது வடக்கு கிழக்கில் புலிகளின் ஆட்சி நன்கு நடைபெறுகின்றது. இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். சிறிலங்கா அரசின் சட்டங்களை அங்கு அமுல்படுத்த முடியாது. இன்று இந்த நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் உள்ளன. இந்த இரண்டு அரசையும் ஒன்றிணைக்க வேண்டுமானால் இந்த ஒன்றையாட்சி முறையில் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் இப்பொழுது மகிந்த ராஜபக்ஷவைச் சுற்றி இருப்பது இனவாத கோஷ்டிகளாகும். முதலில் இவர்களை முற்றாக ஒதுக்கிவைக்க வேண்டும். இதனால் இந்த நாட்டில் இரு அரசாங்கங்களும் ஒன்று கூடும் நிலை ஏற்படும் அப்படி செய்யாவிட்டால் நாடு பிரிந்து செல்வதை எவராலும், தடுக்க முடியாது. இந்த நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமானால் நாட்டில் சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்ல திட்டத்தை



அரசு முன்வைக்க வேண்டும். இதைத் தவிர்த்து ஏமாற்றும் திட்டங்களை முன் வைத்தால் கடைசியில் ஏமாறுவது சிங்களவர்களே என்பதை மறக்கலாகாது. மீண்டும் இந்த நாடு ஒன்றுபட வேண்டுமானால் யுத்த நிறுத்தம் முறையாக கடைப்பிடிக்கப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தையை வெற்றியடையச் செய்யவேண்டும்.

இருபது வருட யுத்த காலத்தில் எடுக்கப்பட்ட சமாதானத்தீர்வுகள் யாவும், படுதோல்வியைத் தழுவிக் கொண்டன. சிங்கள பௌத்த பேரினவாதம் இவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை ஆனால் தற்போது இந்த பேரினவாத சக்திகளின் வலையில் சிக்கிய மகிந்த ராஜபக்ஷ தற்பொழுது பொம்மலாட்டக் கைப்பொம்மையாக மாட்டிக் கொண்டு ஆடிக் கொண்டு இருக்கின்றார். இவரை ஒரு அரசியல் அப்பாவியாகவே எம்மால் கருத முடிகின்றது. இனவாதிகளினால் முன் வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் நிச்சயமாக ஒரு யுத்தத்தை மீண்டும் தோற்றுவிக்கும். அப்படி யுத்தம் ஏற்பட்டால் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் முடிவடைய முடியாத யுத்தமாகமாறும். சில வேளைகளில் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் போன்ற சிறுபான்மைக் கட்சிகளும், இனவாத கும்பலுக்குள் சிக்கும் நிலைமைகளும் ஏற்படலாம்? ஆனபடியால் சிங்கள இனவாத கும்பல்கள் ஒன்றிணைவது இலங்கை தேசியப்பிரச்சினைக்கு ஒரு மரண அடி விழுந்ததற்கு சமமானதெனக் கருதலாம்.

# காலத்தால் மறவாத சேவைகள் நல்கும் ஆசான்களுக்கோர் புனிதநாள்



ஒரு இனம் அல்லது நாடு சுபீட்சமானதாகத் திகழ கல்வி இன்றியமையாதது. இது மனித குலத்தின் பொதுவான உலகியல் நோக்காக தொன்று தொட்டு இருந்து வருவது கண்கூடு.

திண்ணைப் பள்ளிகள் என பழந்தமிழரிடையே நிலவிய கல்வி முறையிலிருந்து காலணி ஆட்சிகளால் உலகியல் மாற்றங்கள் ஏற்பட்டது வரை கல்வியில் பாலர் அல்லது சிறுவர் கல்வி பல மாற்றங்களைக் கண்டுள்ளது.

ஆயினும்,சிறுவர் கல்வி போதிய வளர்ச்சியைப் பெறமுடியாத நிலையில், காலணி ஆட்சிக்காலத்தில்மொண்டசொறி-நேசறி என்ற பெயர்களில் சிறுவர் கல்வியை சிறுவர்களிடத்தில் ஊக்குவிக்கும் வழிமுறையாக மேற்கத்தைய கல்விப் போதனை முறைகள் இங்கும் அறிமுகமாயிருந்தது. குறித்த இலக்கை இக் கல்விமுறை ஏற்படுத்தத் தவறியமை கல்வியறிஞர்களால் உணரப்பட்டது. சிறுவர் கல்விக்கான வளர்ச்சித் தேக்கத்தின் அடிப்படைக் காரணிகளை ஆராய்ந்து கொண்டதில் மேற்கத்தைய சூழலிற்கான கல்வியியல்தான் காரணம் என்பது உய்த்துணரப்பட்டது.அத்துடன், தமிழர் தாயகத்தில் கடந்த இரு தசாப்தங்களுக்கு முன் சிறிலங்காவின் இராணுவமும், அரசும் கல்விக்கான செயற்பாடுகளுக்கு பல வகைகளிலும் தடைகளையும், நெருக்கடிகளையும் ஏற்படுத்தின.

எமது தமிழர் தாயகத்தின் சூழலிற்கேற்ப சிறுவர் கல்வி, சிறுவர் மேம்பாடு, சிறுவர் வாழ்வியல் அபிவிருத்தி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பாலர் கல்விக்கான தனித்துவம் மிக்கதான அமைப்பினை உருவாக்க வேண்டுமென்ற ஒரு எண்ணக் கருவினால் உதயமானதே முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம்.

மனித வாழ்வாதார விழுமியங்கள் முதன்மையானதும் உன்னதமானதுமான கல்வியினைத் தக்கவாறு கட்டியெழுப்புவதே முன்பள்ளிக்கான அடிப்படை நோக்கமாகும். அதாவது மனித வாழ்வியல் விழுமியங்களின் உச்சமான ஒரு இலக்கை அனைத்து மனிதர்களும் அடைவதற்கான மார்க்கமே கல்வி ஆகும். இத்தகைய கல்வி மனித கருவிலேயே ஆரம்பமாகிவிடுவதாக உளவியலாளர்கள் கூறுவர். " தாயின் இதயமே குழந்தையின் கலாசாலை" என்பது ஒரு உளவியலறிஞர் தம் கூற்று.

கருவிலுள்ள குழந்தைக்கு தாயின் எண்ணங்களும் உணர்வுகளும் ஊட்டப்படுவதால், அதன் தொடராக குழந்தையின்நிலையைப் புரிந்து சிறுபிள்ளைப் பராயமான ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தையிடத்திலே மனித விழுமியங்களின் உச்ச நிலையை அடையும் உன்னத கல்விச் சமூகத்திற்கான அத்திவாரத்தை நாட்டுவது இன்றியமையாததென்று உணரப்பட்டதன் பெறுபேறாகப் பெறப்பட்ட முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தியினை ஒரு சமூகத்தின் அல்லது தனிமனிதனின் வாழ்வாதாரத்திற்கான அடித்தளமாக விளங்க வேண்டும்.

" கல்வி இல்லா நிலம் களர் நிலம் அந்நிலத்தில் புல் விளைந்திடலாம் நல்ல புதல்வரைப் பெறுவதேது? " என்ற புரட்சி கவி பாரதிதாசனின் கருத்தினை இவ் இலக்கிற்கு அடுத்த தூர நோக்கிற்குரியதாகக் கொள்ளலாம்-கொள்ளப்படுவது ஒரு தேவை கருதிய கட்டாயம்.

வாண்மை விருத்திப் பயிற்சியுடைய முன்பள்ளிக்கான ஆசிரியர்களூடாக சமூகத்தையும் சமூகம் சார்ந்த நாட்டை கல்வியில் சிறந்த நாடு என ஒவ்வொருவரும் கூறும் நிலை உருவாகி வருவதை நாம் அனைவரும் அறிவோம்.

இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள்எனச்சொல்வதற்குள் பொதிந்துள்ள கருத்தியலினைக்கொண்டு இன்றைய முன்பள்ளிச் சிறார்கள் நாளைய சந்ததியின் தந்தையார் பெற்றோர்களாக, தலைவர்களாக, நல்ல ஆசான்களாக, மருத்துவராக என பல துறைகளிலும் துறைசார் நிபுணத்துவ முடையவர் தம்மை எல்லாம் உருவாக்கும் உன்னதமான பெரும்பணியை காலத்தோடு ஒன்றிச் செய்து நிறைவான நிறைவடையச் செய்யும் பாரிய பொறுப்பை முன்பள்ளி ஆசிரியர்கள் சுமந்து நிற்கின்றமை கண் கூடு.

" அறிவினால் இவ் வையகம் செழிக்கும் ஆங்கு செறிவுடனோற் பெருமானிடம் ஓங்கும்" இத்தகையதான ஒரு செயற்திறன் மிக்க இடமே முன்பள்ளி கல்வி.

கட்டாந்தரையொன்றினை உழுது பண்படுத்தி களைகளை முற்றாகவே அகற்றி வேளாண்மை செய்யும் உழவன் போல, ஒழுக்கம் ஆக்கத்திறன், ஆற்றல்,அபிவிருத்தி, கல்விசார் பண்பும் வாண்மை விருத்தி ஆளுமை என்ற ஏழு நிலைகளையும் ஒன்றியதொரு செம்மையான நிலமாக முன்பள்ளிச் சிறுவர் மனங்களை மாற்றி கல்வி என்ற நன்னீரைப் பாய்ச்சி ஆங்கு மேற் கூறிய துறைபயிர்களை நாட்டி வளர்த்து சமூகம் என்ற சோலையை அழகொளிரச் செய்தல் பணியினை முன்பள்ளி ஆசிரியர்கள் செய்து வருவதனையிட்டு நாம் இந்நாளில் மனதார பாராட்டுவதுடன், தொடர்ந்து சேவையினைச் செய்யவும் வாழ்த்துகின்றோம்.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**
**மாவட்டச் செயலகம்,**
**கிளிநொச்சி.**

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' எனப் புகன்ற வள்ளுவனின் நோக்கு பாருக்கான ஒருசைகை விளக்கு. இருந்தும் இப்பணியில் ஒன்றிணைந்து ஈடுபட்டு வருகின்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆதரவினை சமூகம், அரசு, அரசசார்பற்ற நிறுவனங்கள் கைகொடுத்து உதவுவதே இந்நாளில் செய்யும் கைமாறாகும்.

சமூக அமைப்பில் இன, மத, மொழி, சாதி என பலவாறு பல பிரிவுகள் தலையெடுத்த நிலையில், சீர்கெட்டு கலகம்விளையும் இடமாக மாறிக்கிடக்கின்றது. இந்தக் கலகம் நிறைந்த சமூகத்தை மாற்றி அமைக்கவும், சாந்தியும் சமாதானமும் மனித உரிமைகளை மதிக்கும் ஒரு சமதர்மப் பூங்காவாகவும் மாற்றியமைப்பதற்கு இந்த முன்பள்ளியை திறவுகோலாகக்கருதி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய கட்டமைப்பினை ஏற்படுத்தி முன்பள்ளிச் சிறார்களின் கல்வியில் நாட்டம் கொண்டு முன்பள்ளிகளை அமைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவினை, ஊக்குவிப்பினை தன்னால் முடிந்தவரையும் வழங்கி வருகின்றது. அந்தவகையில் தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் இருபத்தைந்து கல்விவலயங்களாக அமைக்கப்பெற்று மொழி கடந்த நிலையில் எல்லோர்க்கும் கல்வி என்றதும் சமத்துவமான கல்வியூட்டல் என்ற தொனிப்பில் தமிழர்-இஸ்லாமிய, சிங்கள மக்களது சிறார்களைக்கொண்ட முன்பள்ளிகள் அமைத்துத் தனது ஆதரவினைத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களிடையே 5157 ஆசிரியர்களைக் கொண்ட 2721 முன்பள்ளிகள் அமைக்கப்பெற்று உரிய முறையில் பராமரிக்கப்பெற்று வருகின்றது.இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் 170 முன்பள்ளிகளில் 285 ஆசிரியர்கள் கற்பித்தல் செயலில் தம் சேவை களை செவ்வனே நிறைவேற்றி வருகின்றனர்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் காலத்திற்கேற்ற அத்தியாவசியமான உதவிகளைச் செய்து தருவதற்கான அனுசரணையை தமிழர்புனர் வாழ்வுக்கழகம் வழங்கி வருவதுடன், இத்தனை நிறுவனங்களதும் பக்க உதவிகளோடு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தமிழர் தம் சமூகவியல் நோக்கில் தனது கடமையை நிறைவேற்றுவது போல பாரியபொருளாதார உதவியில் முன்பள்ளிகளின் கனத்த சுமையை தன் சுமைகளோடு சேர்த்துச் சுமந்து கொண்டிருப்பது மறுதலிக்க முடியாத உண்மை என்பது மனங்கொள்ளப்பட வேண்டும். இந்நேரத்தில் செயற்பாட்டிற்கு வடிவம் கொடுத்து சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக உ[illegible]ன்ற உன்னதமான பணியைச் செய்கின்[illegible]பள்ளி ஆசிரியர்களை இந் நாளில்[illegible]வந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஒன்றிணைவோம்- சேவை செய்வோம்.

# ஆசிரியர்களின் வினைத்திறன் பல்கிப்பெருக...

இன்று உலக ஆசிரியர் நாள் பல்வேறு புதிய கல்வி அணுகுமுறைகள் விஞ்ஞான தொழில்நுட்ப பரிமாணங்களும் மனிதனுக்கான புதிய ரசனை வெளிப்பாடும் தொழில் வழங்குனர்களின் எதிர்பார்க்கை, சுய திருப்தி ஆகியனவற்றினால் கல்வியும்,நகர்ந்து செல்வது கண்கூடு.

எமது பிரதேசத்தில் இன்று ஆசிரியர் எதிர்நோக்கும் நெருக்கீடுகள் உள உடைவு போன்றனவற்றை பேசுவதும் ஆசிரியரின் இன்றைய இருப்பின் திசையை மதிப்பீடு செய்வதும் வேண்டப்பட்டுள்ளது.

இலங்கைத்தீவின் ஒரு பிரதேசத்தில் சிறுபான்மை சமூகமாக வாழும் நாம் அரசியல் வஞ்சனைகளால் அதிகம் பாதிக்கப்பட்டு பொது சந்ததிகளான பிள்ளைகளின் பூரண ஆளுமை தேடலில் நலிவுற்றுள்ளோம்.

இந்த வேளையில் ஆசிரியர்களாகியவர்களின் ஒட்டு மொத்த நோக்கமும் பாடசாலை பாடவிதானத்தை அடைவிப்பதும், அதனை எழுதி வழங்கும் விடைத்தாளில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கு கொண்டு செல்வது, அதன் மூலம் பெற்றோர் அதிபர் மற்றும் பாடசாலைச் சமூகத்திடம் காட்டி அவர்களைத் திருப்தி அடைவிப்பதுமாக ஆசிரியர்களின் காலம் நகர்கின்றது.

இன்று ஆசிரியர்களின் கைங்கரியம் இதுவாக இருக்கும் பட்சத்தில் நாளைய மாணவன் ஒரு பூரண சந்திரனாகவன்றி தேய்பிறையாகவே தோற்றமளிப்பான் என்பதை மனதிற் கொள்ள வேண்டும் அவ்வாறெனில் இந் நிலைக்கு யார் காரணம்?

யுத்த வலயம், பாதிக்கப்பட்ட வலயம் ஆபத்து விளிம்பு என்று கல்வியின் புதிய புவியியல் நாமங்கள் தோன்றிவிட்டன இதற்கு யார் காரணம்?

பணமுடிச்சோடு வந்து நின்று கொண்டு அந்தத் திட்டம், இந்தத் திட்டம் என கல்விப் புலத்தவர்களை மருளச்செய்து பல செயல் அமர்வுகளையும், செயலட்டைகளையும், வகுப்புகளையும் கல்விப் புலத்தில் விதைப்பவர்களும் அதனைச் சரி என்று அதுவே எம்மைக் காக்கும் 'ஔடதம்' என நினைப்போரை என்னவென்பது?

"பிள்ளையின் கல்வி வாழ்வு பற்றி பிளேடோ, பிள்ளை கற்ற பின்தான் வாழப்போகின்றது என்ற எடுகோள் பிழையானது என்றார். கற்கும் போதே வாழ்கின்றது என்பதே அவரது கருத்து. எனவே பிள்ளையை ஆட விடுவதும், பாடவிடுவதும், ஓட விடுவதும், சாட விடுவதும் போட விடுவதும் அவசியம்.

இதனால் தான் சிறந்த கல்வி அறிஞர்கள் பாடவிதானத்தில் விளையாட்டு, விளையாட்டுப் போட்டிகள்/ பாடம் சார் வைபவங்கள் /கலைப் படையல்கள், சாரணர்/ தொண்டு இயக்கங்கள், சமய/ கலாச்சார விழாக்கள், உடற்பயிற்சிகள் முதலியனவற்றை புகுத்தினர். இதையெல்லாம் விசேட செயற்றிட்டங்கள் அடித்துச் சென்று விட்டன.

ஆசிரியர்கள் ஓய்வில்லாது பாடசாலையிலேயே கூடுதலான நேரத்தைச்செலவழிப்பதால் அவர்களது பிரத்தியேக வாழ்வு மிகவும் பாதிக்கப்படுகின்றது சொந்தப் பிள்ளைகளை எதிர்காலத்துக்கு தயார்ப்படுத்த முடியாதநிலை தோன்றி மரண விரக்தியில் ஆசிரியர்கள் ஆளாகியுள்ளனர்.

ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கென்றே புதிய பாடசாலை கட்டமைப்பை உருவாக்க வேண்டுமோ என்ற புதிய சிந்தனையும் முகிழ்ந்துள்ளது.

இன்றைய கல்வியால் ஓய்வற்றுள்ள ஆசிரியன் கடுமையாகப் பாதிக்கிறான் "நித்திரை முழித்தவாக னச்சாரதி வாகனத்தை நித்திரை மயக்கத்தில் ஓட்டிச் செல்வது போலவே கற்றல், கற்பித்தல் இரண்டும் அமைகிறது.

சின்னப் பிள்ளைகள் மாலை நேரம் விளையாட வானொலி கேட்க கதைப்புத்தகம் வாசிக்க, பெற்றோருக்கு உதவி செய்ய, நண்பர்கள் வீடுகளுக்குச் செல்ல விரும்பமாட்டார்களா? கிட்டியடிக்க, கிளித்தட்டு மறிக்க, மாங்காய்க்கு கல்லெறிய, வண்டில் கட்ட, வளையம் உருட்டவும் வேண்டாமா? நகரத்து மாணவன் கிராமப்புறத்து மாணவனை விட வேறுபட்டு விட்டான்.

அவன் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை விட கணினியில் இதை எல்லாம் செய்கிறான்.

இது அவன் சுயமாகச் சிந்திக்கவும், தானே முடிவெடுக்கவும், உளம் மகிழவும், செய்கின்றது.

மிகவும் வேதனை தரும் விடயம் என்னவெனில் பாடசாலை வகுப்புக்களில் மாணவர்கள் வெறுமையுடன் இருக்க ஆசிரியர்கள் செயலமர்வுகளில் இருப்பதும் அதிபர்கள் பாடசாலையில் இராது கட்டடம், வேலி சாமான், தட்டு முட்டு என ஓடித் திரிவதும் புதிய கலாச்சாரமாக மாறி விட்டது இதனை அதிபர் ஆசிரியர்கள் மீது வைக்கும் சுமையாகவே உணர முடிகின்றது. சனி ஞாயிறுகளில் ஆசிரியர்கள் ஓய்வின்றித் திரிகின்றமை எமது சமூகத்தில் பெரும் உளவியல் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றது.

ஆசிரியர்கள் விரதம் அனுஷ்டிப்பதில்லை கோவிலுக்குப் போக முடிவதில்லை கல்யாண வீடு, செத்த வீட்டுக்குப் போகமுடிவதில்லை, நண்பர்க ளோடு சஞ்சரிக்க முடிவதில்லை கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் வழிபாட்டுக்குத் தவறாமல் தேவாலயங்களுக்குப் போவதுண்டு. இந்தப் புதிய செயற்றிட்டக் கலாச்சாரம், ஆசிரியர்களை ஆக்கிரமித்தால் ஞாயிறுகளில்செயலமர்வு, கருத்தரங்குக்கென்று அலையும் நிலை கலந்து கொள்ளாவிட்டால் விளக்கமளிக்கவும் கைகட்டி நிற்கவும் பயந்து திரியும், ஆசிரியர்களை யார் விளங்கிக் கொள்கிறார்கள். இதனால் ஆசிரியர், அதிபர் உறவு பாதிக்கப்படுகின்றது. இதனால் பாடசாலைக்குள் பூகம்பங்கள். ஒற்றுமை குலைகின்றது.

கூட்டுக் குடும்ப கலாச்சாரம் உடைய எமது சமூகம் அதிலிருந்து உடைந்து விட்டது. அதனால் அம்மம்மா, அப்பம்மாவின் அர வணைப்பு இல்லாத பேரப்பிள்ளைகள் என்பதால் தொழில் செய்யும் தாய் தனது

**பெருமாள் கணேசன்**

கைக்குழந்தையைப் பாடசாலைக்குத் தூக்கிச் சென்று அதிபர்களின் கருணையால் தனது வகுப்பறையில் வைத்திருக்கும் சம்பவம் நடந்துவருகிறது. எனவே இதே ஆசிரியர்கள் மீதான அதிகமான வேலைப்பழுக்கள் ஆசிரியர்களை மன அழுத்தத்திற்குள்ளாக்கிவிட்டுள்ளது.

எனவே ஆசிரியர்களுக்கென்ற உரிமை சாசனத்தை ஆசிரியர்கள் முன் மொழிந்து சம்பந்தப்பட்டவர்களிடம் அனுமதி பெற்று ஆசிரியர்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும்

(8 ஆம் பக்கம்பார்க்க)

## ஆசிரியர்களின்...

பொறுப்புணர்வுடனும் செயற்பட வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

ஒரு அதிகாரி அண்மையில் சொன்னது காதில் ஒலிக்கிறது.

"அதிகமாக செயலமர்வுகள் செய்த கல்வி வலயம் எனினும் கல்வியில் ஆபத்துவல்யமாய் இருக் கிறது" என்றார்

அதனை பின்வருமாறு மாற்று வதே பொருத்தம்.

"அதிகமாக செயலமர்வு செய்த கல்வி வலயம் என்பதால் ஆபத்து வலய மாகிவிட்டது என்பதாகும்.

வண்ணத்துப் பூச்சியின் சிற கினை உடைத்து ஊசியில் குற்றி வைத்துப் பாருங்கள் அது எத்தனை வேதனைப்படும் என சிந்தனை யாளர் கள் குழந்தைக் கல்வி பற்றி விளக் கியுள்ளனர்.

எனவே "செருப்புக்காக காலை வெட்டாமல் காலுக்காகச் செருப்பை வெட்டுவோம்" முன்னர் பரிகாரக் கற்பித்தலை ஆசிரியன் மாணவரின் நிலை, தேவைக்கேற்ப வழங்கினான். இன்று பணத்தை எதிர்பார்த்து செயற்பட மட்டுமே அவர்கள் பழக்கப் பட்டுவிட்டனர்.

இலங்கை பாடசாலை அமைப் பில் ஏறத்தாழ ஆறு மணித்தியால பாடவிதான முறைமைதான் பரிந்து ரைக்கப்பட்டுள்ளது.

அது பிள்ளையின் மூளைத்திற னின் நிலை அறிந்து ஆசிரியனின் உடல் உள சக்தியறிந்து நிர்வாக கட்டமைப்புக்கு வசதியாயிருக்க எமது சமூக பொருளாதார நிலைய றிந்து தான் தீர்மானிக்கப்பட்டதாக கல்விப்புலத்தார் குறிப்பிடுகிறார்கள். அதனை மாற்றி ஆசிரியன் மாணவன் மேலும் செயற்படுவது மிகவும் எதிர்காலத்தைப் பாதிக்கும்.

பாடசாலையில், விளையாட்டு முற்றம் பயன்படுத்தப்படாமல் உள் ளமை, மைதானம், கலைநிகழ்வு மண்டபம், உடற்பயிற்சி வெளி என ஒரு கட்டுமஸ்தான பாடசாலையை எடுத்தால் மாணவர்களும் ஆசிரியர் களும் அதில் சஞ்சரிப்பதில்லை. ஏன்?

எமது பிரதேசத்தில் கல்விசார்பாக முன்னெடுக்கப்படுவனவற்றை ஒரு மீள் மதிப்பீடு செய்வது அவசியமா கியுள்ளது. (Review [illegible]து இரு நாள் முழுநேர மாநாடாக [illegible]மவதாகும். முதல் நாளில் எமது நடத்தை [illegible]ற்றிய அல்லது கல்விப்பணிமனையினரின் முழு முன்னெடுப்புக்கள் பற்றிய ஒப்புக்கொடுத்தல்/சமர்ப்பணம். அத்தோடு பிரச்சினைகளை முன் வைத்தலாகவும் அடுத்தநாள் அத னைத் தீர்க்கும் வழிகளைக் கண்ட றிவதும் நடைமுறைப்படுத்தும் வழிக ளும் என அமைவதாக ஒரு மாநாடு அவசரமாகத் தேவையாகவுள்ளது.

அதேவேளை அந்த மாநாட்டில் எவரும் பங்குபற்றவும் கருத்தளிக்கும் சுதந்திரமும் அதனால் எவரையும் எவரும் பாதிக்காத உத்தரவாதமும் இருத்தல் வேண்டும்.

இப்படியான ஒரு நிகழ்வே எமது கல்விச் செயற்பாடுகளின் அனுகூல, பிரதி கூலங்களை முன்வைக்கும். அதன் மூலம் எம்மை நம்பியிருக்கும் அடுத்த சந்ததிக்கு ஆக்கபூர்வமாகச் சரியான கல்வியை வழங்க முடியும்.

ஆசிரியர்கள் மனமுவந்து செய்த வற்றுக்கெல்லாம் காசே என்று புதிய கலாச்சாரம் பரவியுள்ளதால் தொண்டு மனப்பான்மை கடமையுணர்வு என்பன அரிதாகி மாணவச் செல்வங்கள் சரியான பயனை அடையமுடியா துள்ளனர்.

பாடசாலைகளை ஆக்குதலும், மூடுதலும், இடம்மாற்றுதலும் அதா வது (தோன்றல்,திரிதல், கெடு தல்)அவசியமாகியுள்ளது.

மனிதன் கூடிவாழும் பிராணி மட்டுமல்ல ஓடிவாழும் பிராணி, ஒரே இடத்தில் அவன் வாழவில்லை. ஆபிரிக்கக் கண்டத்தில் 10 மில்லி யன் ஆண்டுக்கு முன்னர் தோன்றிய மனித இனம் ஓடுவதால் தான் உலக உருண்டையில் எல்லா இடமும் பரவியது.

சில கிராமங்களில் இப்போது பாடசாலைகள் தேவையற்றுவிட்டன. எவற்றை நகர்த்த வேண்டும் 20-30 பிள்ளைகளுக்கு பாடசாலையை மினக்கெடுத்தாது அப்பிள்ளைகளைக் கல்விக்காக நகர்த்துவதால் மாணவர் களுக்கும் கல்வி நிர்வாகத்துக்கும் நன்மையுண்டு.

எனவே கல்வியில் புதிய செல் நெறிகளும் மாற்றுக்களும் அடிப்படை கருத்தியலைச் சரியாக விளங்கி (Idoldy) கல்விப் பரிமாற்றம் நிகழ இந்த நாளில் ஆசிரியர் உலகம் திடசங்கற்பம் எடுப்பதோடு

'ஓய்வே உற்சாகமாக உழைக்க அடிப்படை" என்பதைப் புரிவோமாக.


# அறிவித்தல்

யாழ்.சாலையின் இரு மருங்கும் கற்றூண்கள், மரக்குற்றிகள்,மின்சார வயர் என்பன காணப்படுகின் றன. அவ்வாறே கனகபுரம் வீதியில் மரக்கிளைகள் மின்சார சபையினால் வெட்டப்பட்டு வீழ்த்தப்பட் டுள்ளன. இவற்றின் உரிமையாளர்கள் அவற்றினை 07.10.2005 ஆம் திகதிக்குள் அகற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தவறின். சகல பொருட்களையும் பிரதேச சபையின் சொத்தாகக் கருதி கையகப்படுத்தி அகற் றப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்ளுகின் றோம். அத்துடன் அகற்றுவதற்கான அறவீடும் மேற்கொள்ளப்படும்.

*பொன். நித்தியானந்தம்,*
*விசேட ஆணையாளர்,*
*கரைச்சிப் பிரதேசசபை,*
*கிளிநொச்சி.*

(சி.12950)



## 2005.ஒக்.06 உலக ஆசிரியர் நாள்

### அறிவுப் பயிரின் ஆணி வேர்கள்

அகத்து இருளகற்றும் அறிவூற்றுக்களே!
அகிலத்துக்கு ஒளியேற்றும் அருளாளர்களே!
அறிவுப் பயிரின் ஆணிவேர்களே.
அறநெறியுணர்ந்துணர்த்தும் ஆசான்களே!

வாழ்வுக்கு வழிகாட்டி வழிமூட்டுவீர்.
வையகம் வாழ்ந்திட வழிகாட்டுவீர்.
தேர்ந்து நல்கலைகளைத் திறமுடனுரைப்பீர்
தேசிய குறிக்கோளைச் சிந்தையுள் கொண்டீர்.

எண்ணும் எழுத்தும் ஏற்றமுறச் செய்வீர்.
எம்மினத்தின் வைர ஏணிப்படிகளாவீர்.
திண்ணிய ஞானமும் தியாகமும் உடையீர்.
நீங்கள் திறமுடன் பணிபுரியச் சிறப்பே வாழ்வீர்

*தமிழீழக் கல்வி*
*மேம்பாட்டுப்பேரவை,*
*கிளிநொச்சி மாவட்டம்.*

(சி.12949)



# தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர் களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. பணிநிலை :- அலுவலர் (பயிலுநர்)
தகைமைகள் :- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் தொழில் நிர்வாகமாணி (BBA)/ வணிகமாணி (B.Com)/ விஞ்ஞானமாணி (B.Sc) பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர் தேசியக்கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் வங்கியியல் பட்டப்படிப்பை (Diploma in Banking) நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- 4,500 + 6,000
அகவை எல்லை :- 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

02. பணிநிலை :- கணக்காய்வாளர் (பயிலுநர்)
தகைமைகள் :- ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர் தேசியக்கணக்கியல் டிப்ளோமா (HNDA) கற்கை நெறியில்/உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (HNDM) கற்கை நெறியில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- 3500 + 6000
அகவை எல்லை :- 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

03. பணிநிலை :- உத்தியோக உதவியாளர் தரம் – 03
தகைமைகள் :- க.பொ.த (சாதாரணதர) தேர்வில் கணிதம் 42/ கணிதம்II , தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன்,க.பொ.த. (உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- $\frac{3,670 - 5,070}{70X\ 20} + 6,000$
அகவை எல்லை :- 19 – 25 ஆண்டுகள்

**வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவு செய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை–அலுவலர் (பயிலுநர்), ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை–கணக்காய்வாளர் (பயிலுநர்), ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை –உத்தியோக உதவியாளர் தரம்–03" எனக் குறிப்பிடப்பட்டு 2005.10.31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

BANK OF TAMILEELAM

**மனிதவள மேலாளர்,**
**மனிதவளப்பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்**

குறிப்பு:–

* முழுமையாக நிறைவுசெய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.
* நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளைப் பதிவுத்தபாலில் (மனிதவள மேலாளர், மனிதவளப் பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், இரத்தினம் மேல்மாடி,யாழ்சாலை,கிளிநொச்சி. எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளி னூடாகவோ அனுப்பி வைக்கலாம்.

(சி.12948)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆங்கில விரிவுரையாளரும் திருநாவுக்கரசு இராஜேஸ்வரி தம்பதிகளின் சிரேஸ்ர புத்திரனுமாகிய திரு. தி. தேவதயாளன் 06. 10. 2005 (இன்று) நிகழும் யாழ் பல்கலைக்கழக பொது பட்டளிப்பு விழாவில் பட்டம் பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். மேலும் இவர் பல பட்டங்கள் பெற்று உயர்வடைய இறைவனை வேண்டுகிறோம்.

மாவிட்டபுரம்
தெல்லிப்பளை.

மு.பூலோகராஜா,
தி.தேவகுணாளன்
பூ. நகுலன்
குடும்பத்தினர்.

(சி-12893)

## National language Research Centre
தேசிய மொழி ஆய்வு மையத்தின்

# ஆங்கிலம்

இலவச தொலைக்கல்வி பாடநெறி
10 வயது முதல் 55 வயதுவரை யாரும் சுயவிபரக் கோவையை அனுப்பி விண்ணப்பிக்கலாம்.

NLRC
198,Galle Road
Sampath Bank 1st fir Dehiwala
(5394)

# காணவில்லை

வைத்திலிங்கம் பார்த்தீபன் என்பவரது எருதுமாடு ஒரு சோடி (வெள்ளைக்குறி-ப,கறுப்பு.K.Sகுறி) ஊற்றுப்புலம் முறிப்பில் காணவில்லை. இதனைக் கண்டவர்கள் ஊற்றுப்புலத்திலுள்ள வைத்திலிங்கத்துடன் தொடர்புகொண்டு அறியத்தரவும். சன்மானம் வழங்கப்படும்.

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



தாய் மடியில்
03 – 06 – 1981

தாயகத்தின் மடியில்
06 – 10 – 2000

## லெப்.கதிரெழிலன்
(அந்தோனிப்பிள்ளை இலங்கரூபன்)
இம்ரான் பாண்டியன்படையணி
ஓயாத அலைகள் –04

நடவடிக்கையின் போது யாழ். அரியாலை பகுதியில் வீரச்சாவு

ஐந்து ஆண்டுகள் சென்றாலும்
ஆறவில்லை எம் மனம்–இன்னும்
ஆண்டுகள் பல பறந்தாலும்
மறவோம் உன் இன்முகம்

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்

தகவல்:
குடும்பத்தினர்.

முகவரி:-தபாற்கந்தோர் அருகாமை, மல்லாவி.

(6811)

# 7 ஆம் ஆண்டு நினைவலைகள்...



## கடற்புலி மேஜர் கலாநிதி
(இராசேந்திரம் நந்தினி)
ஆழியவளை,யாழ்.

தாய் மடியில்:–07–01–1976
தாய் மண் மீட்பில்:– 06–10–1998

சிக்குறுவின் சிக்கெடுப்பில்
விதையாகிப் போனவளே
அன்று நீ
வேள்விப் பொருளாய்
வீழ்ந்தாய்-ஆனாலும்
உன்நினைவுகள் இன்றும்
எம்முடனே நிழல்களாய்

06. 10. 1998 அன்று கனகராயன் குளத்தில் இவரோடு வீரகாவியமான அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருவதோடு இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் போராளிகள்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

ஆழியவளை.

இவ்வண்ணம்,
குடும்பத்தினர்.

(6804)

# நமது செய்தி
Namathu Seithi

"சுனாமிக்குப் பின்னர் ஒளியிழந்துள்ள மாணவர்களின் எதிர்காலத்துக்கு வழிகாட்டும் ஆலோசனைகளுக்கு"

படியுங்கள் - நமது செய்தி

சுனாமி மறுவாழ்வுப் பணிகளில் பெண்களே அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்

ஐ.நா. அதிகாரி

# வாழ்த்தி வரவேற்கின்றோம்

## (மன்/ இலுப்பைக்கடவை அ. த. க. வித்தியாலயத்தின் அதிபர் திரு. நந்தகோபாலசிங்கம் இராமச்சந்திரன் B.A (Hons)Dip in Ed)

நல்லாசானாகி இதுவரை இருந்து கற்பித்தலில் சாதனை படைத்து அதிபராகப் பதவி உயர்வு பெற்ற திரு.ந. இராமச்சந்திரன் அவர்களை இன்முகத்துடன் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பா.ஆ.ந. சங்கம்,
மன்/இலுப்பைக்கடவை அ.த.க.பா

எமது பாடசாலைக்குப் புதிய அதிபராக நியமனம் பெற்ற திரு. ந.இராமச்சந்திரனை வரவேற்பதுடன் முகாமைத்துவத்திலும் சிகரமாக திகழ இறைவனை வேண்டி நிற்கிறோம்.

பா.அ. சங்கம்,
பா.மா. சங்கம்
மன்/இலுப்பைக்கடவை அ.த.க.பா

நெய்தலும் மருதமும் இணைந்த எம் மண்ணிற்கு பெரும் கொடையாகக் கிடைத்திருக்கும் அதிபரை உளமார வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

மீனவர் சங்கம்,
இலுப்பைக்கடவை.



இலுப்பைக்கடவை ஊர்தனை இன்முகத்துடன் வரவேற்று, எதிர்கால இளைய சமூகத்தை இன்புறச் செய்வதோடு சகலரையும் ஒன்றிணைத்து வழிநடத்த வேண்டுமென எதிர்பார்த்து வாழ்த்துகிறோம்.

கி.அ. சங்கம்,
கமக்கார அமைப்பு,
இலுப்பைக்கடவை,மன்னார்.

கற்பித்தல் வழிமுறைகள் மூலம் மாணவர்களுக்கு ஒளியூட்டிய எம் அதிபர் நிருவாகத்திலும் பாடசாலைக்கும் கிராமத்துக்கும் வலுச்சேர்க்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

மாதர் சங்கம்,
இலுப்பைக்கடவை.

எமது கிராமத்து பாடசாலைக்கு அதிபராகக் கடமையேற்றுள்ள திரு.ந. இராமச்சந்திரன் அவர்களை வரவேற்று வாழ்வில் எம் சிறார்களை உயர்த்த உந்துசக்தியாகித் திகழ வேண்டுமென வேண்டுகிறோம்.

வர்த்தக சங்கம்,
இலுப்பைக்கடவை

(6751)



பயிற்சியாளர் விஜயநீதன்



ரீ. நிசாந்தினி



முகமட் காறீஸ்



ஸ்ரனிஸ்லோஸ்

# பன்னிரு வேங்கைகள் நினைவாக தாயக சாதனையாளர் கௌரவிப்பு

லெப். கேணல் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள் நினைவாக 2005ஆம் ஆண்டின் விளையாட்டுக்கான தமிழீழ தேசிய கௌரவிப்புவிழா நேற்றுக் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தூயவன் அரசறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. தமிழீழ விளையாட்டுத்துறைத் தலைவர் ம. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் 2005ஆம் ஆண்டில் விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்த இளையோருக்கும் அவர்களின் பயிற்றுனர்களுக்கும் கௌரவிப்பும் தேசிய விருதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்களால் வழங்கிக் கௌரவிக் கப்பட்டது.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த முகமட் காறீஸ், கூட்டுமெய்வல்லுனர் நிகழ்வுகளின் சாதனையாளர்கள் ஆர். ரதீசன், ரீ. நிசாந்தினி, ஆகியோரும், இவர்களின் பயிற்றுனரான விஜய நீதன் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சகாயரட்ணராஜா நிரஞ்சன் இவர்களின் பயிற்றுனரான எம். முகுந்தன், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சாதனையாளர் எம். பிரதீப்குமார் அவர்களின் பயிற்றுனர் றொகான் இராஜசிங்கம், உயரம் பாய்தல் சாதனையாளர் கமலமோகன் அவரின் பயிற்றுனர் செ. ரமணன், உதைபந்தாட்டச் சாதனையாளர்களான மன்னார் புனித சபேரியார் கல்லூரி பதின்மூன்று வயதுப் பிரிவு வீரர்கள் அவர்களின் பயிற்றுனர் தா. ஜேக்கப் ஆகியோரும் தமிழீழ தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சாதனையாளர்கள் ஆவர்.

உதைபந்தாட்டச் சிறப்புச் செயற்பாட்டிற்காக மன்னார் புனித சபேரியார் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ் தமிழீழ விளையாட்டுத்துறைப்பொறுப்பாளரால் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

தமிழீழ விளையாட்டுத்துறை - இளையோர் செயற்பாட்டு நிறுவனம் என்பன இத்தேசிய விருது வழங்கும் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

முன்னதாக தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் தேசியக் கொடியினை தமிழீழ விடுதலைப் புலிக்ளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் ஏற்றிவைத்தார். நிகழ்வின் மங்கல விளக்கினை மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன், மன்னார் புனித சபேரியார் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ் லோஸ் ஆகியோர் ஏற்றி வைத்தனர். இந்நிகழ்வில் விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



13 வயது கால்பந்து அணி

## லெப். கேணல் நிரோஜன் நினைவு விளையாட்டுப் போட்டி உடையார்கட்டில்

கடற்புலி மாவீரர் லெப். கேணல் நிரோஜன் ஞாபகார்த்தமாக விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் ஏழாம் திகதி தொடக்கம் ஒன்பதாம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

உடையார்கட்டு சுதந்திரபுரம் சந்தியில் அமைந்துள்ள விளையாட்டரங்கில் இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

ஏழாம் திகதி மென்பந்து கிரிக்கெட் போட்டியும், எட்டாம் திகதி மைதான போட்டி நிகழ்வுகளும் இடம்பெறும்.

இறுதி நாள் நிகழ்வுகள் ஒன்பதாம் திகதி காலை 9.00 மணி முதல் மாலை வரை நடைபெறும்.

சிறப்புப் போட்டி நிகழ்ச்சியாக கண்காட்சி, உதைபந்தாட்டப் போட்டி நிகழ்வு இறுதி நாளான்று மாலை 3.00 மணிக்கு இடம்பெறும் இப்போட்டி நண்பர்கள் விளையாட்டுக்கழகத் திற்கும், நிரோஜன் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே நடைபெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

(19)

## பிறிமியசிப் கால்பந்துப் போட்டி



பிறிமியசிப் கால்பந்துச் சுற்றுப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் லிபர்பூல் செல்சியா அணிகள் மோதும் காட்சி. இப்போட்டியில் செல்கியா அணி 2-0 என்ற கோல் கணக்கில் லிபர்பூர் அணியை தோற்கடித்துள்ளது.

## மென்பந்து துடுப்பாட்ட இறுதிப் போட்டி கல்வித் திணைக்கள அணி சம்பியன்



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி உள்ளூராட்சித் திணைக்களத்தினால் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் கிளிநொச்சி கல்வித் திணைக்கள அணி வெற்றி பெற்று சம்பியனானது.

நேற்று மாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில் வீதி அபிவிருத்தித் திணைக்கள அணியை எதிர்த்து கல்வித் திணைக்கள அணி மோதியது.

முதலில் ஆடிய வீதி அபிவிருத்தித் திணைக்கள அணி 10.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 50 ஓட்டங்களைப்பெற்றது. இதில் அம்பி 27 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் சிறிரமணன் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய கல்வித் திணைக்கள அணி 9.1 ஓவரில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கரன்ராஜ் அதிகபட்சமாக 23 ஓட்டங்களைப் பெற்றார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக சிறிரமணன் தெரிவானார்.

தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக அருன்ராஜூம், தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக உமாகாந்தும் தெரிவாகினர்.

இப்போட்டியின் மத்தியஸ்தர்களாக சுபானந், லெனின் ஆகியோர் கடமையாற்றினர்.

கிளி.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங் குமரன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராச நாயகம், கிளி நொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா ஆகியோர் உரை நிகழ்த்தியதுடன் பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

## சுப்பர் சீரிஸ் முதலாவது ஒருநாள் போட்டி உலக அணியை வீழ்த்தியது அவுஸ்திரேலியா



உலக 11 பேர் அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் நடைபெற்று வரும் சுப்பர்சீரிஸ் போட்டித் தொடரின் முதலாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 93 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

ஆஷஸ் தோல்விக்குப்பின் அவுஸ்திரேலிய அணியின் போக்கைத் தீமானிக்கும் போட்டியாக அமைந்த முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியா சிறப்பான வெற்றியை பெற்று தனது பலத்தை மீண்டும் நிரூபித்துள்ளது.

முதலில் துடுப்பாடிய அவுஸ்திரேலியா நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைப்பெற்றது.



துடுப்பாட்டத்தில் கில்கிறிஸ்ட் ஹாட்ரிச், பிரெட்லீ ஆகியோர் கைகொடுத்தனர். கில்கிறிஸ்ட் 48 ஓட்டங்களையும் ஹாட்ரிச் 58 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் விட்டோரி நான்கு விக்கெட்டுக்களையும், முரளி இரண்டு விக்கெட்டுக்களையும், பொலக் இரண்டு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

256 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய உலக அணிக்கு மெக்ராத் வழக்கம்போல் தொல்லை கொடுத்தார். அவர் சேவாக், கலிஸ் ஆகியோரை ஒற்றை இலக்கத்துடன் வெளியேற்றினார். அதேபோல் பிரெட்லியும் சிறப்பாக பந்துவீசி இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார். தொடர்ந்து வந்த வீரர்களும் சிறப்பாக பந்து வீச உலக அணி 41.2 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 168 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதில் சிறப்பான இணையாகத் திகழ்ந்த சங்கக்கார பிளின்டொப் ஜோடியை சுழல்பந்து வீரர் வட்சன் வீழ்த்தி அவுஸ் அணியின் வெற்றியை உறுதி செய்தார். அவரே போட்டியின் நாயகனாகவும் தெரிவானார்.

சங்கக்கார 68 ஓட்டங்களையும், பிளின்டொப் 35 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப்பெற்றனர்.

## பாகுபாடுகளும், புறக்கணிப்புகளும் எமது கனவுகளைக் கலைத்துவிடாது

### அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ்



புத்திக் கூர்மையை வழங்கும் நூற் கல்வி, உடல் மேம்பாடுகளை வழங்கும் விளையாட்டுக்கள், தாயகத்தையும் சமூகத்தையும் நேசிக்கும் தேசியப்பற்று, அறநெறி நின்றொழுக வழிகாட்டும் ஆன்மீகம் எனப் பல்துறை ஆளுமையையும் ஒரு சிறுவனிடத்தில் ஏற்படுத்தும் முழுமையான கல்வியை வழங்குவதே கல்விப் பணியாளர்களான எங்களுடைய கடமையாகும். முழுமையான ஆளுமைக் கூறுகளையும், உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வழிகாட்டுவதே கல்விப் பணியாகும் எனத் தெரிவித்துள்ளார் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனீஸ் லோஸ் .

லெப். கேணல் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள் நினைவாக நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழ் தாயக சாதனையாளர்கள் கௌரவிப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

எம்மைப் பொறுத்தவரை தென்னிலங்கையோடு ஒப்பிடும் போது இன்றும் வளப்பங்கீடுகளில் பாகுபாடு காட்டப்படும் ஒரு சமூகமாகவே ஒதுக்கப்படுகின்றோம். எனினும் எமது கனவுகளை எவராலும் அழித்துவிட முடியாது. நெருக்கடிகளுக்குள்ளும் சாதனைகளும் வெற்றிகளும் பெறும் வரலாறு எமக்குரியதாகும் எனத் தெரிவித்த அவர், எமது மக் களின் நீதியான உணர்வுகளையும், நியாயத்தையும் நிலைநாட்டும் விடுதலைப்புலிகளுடன் நாம் இணைந் திருப்பதையாரும் தடுத்து விட முடியாது என வும் தெரிவித்தார்.



## சிந்தனைக்கு



ஒரு பலம் வாய்ந்த சர்வதேச சக்தியாக அணிதிரண்டு, எமது மக்களின் விடிவுக்காக உலக தமிழினம் உரிமைக்குரல் எழுப்ப வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06.10.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## ஆதரவென்ற பேச்சால் பயனில்லை!

மறு அறிவித்தல் வரை தமிழீழ விடுதலைப்புலிகளின் குழுவை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வரவேற்காது என்ற விடயத்தில் நோர்வே நாட்டிற்குத்தோல்வி என்ற வகையில் தென்னிலங்கை ஊடகங்களில் வெளியாகிய செய்தியை மறுத்துள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயம் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையில் சமாதானம் ஏற்படுத்துவதற்காக நோர்வேயின் ஏற்பாட்டு நிலைக்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றது, எனவும் தெரிவித்துள்ளமை பிரிட்டிஷ் அரசு யதார்த்தத்தில் இருந்து சிறிது விலகியுள்ளதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

பிரிட்டிஷ் அரசு கூறியிருப்பது போன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு நோர்வே அரசிற்குத் தோல்வி என்பது இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஐரோப்பிய யூனியனின் நடவடிக்கையானது நிச்சயமாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தாக்கத்தை, பின்னடைவை ஏற்படுத்துவதைத் தடுத்துவிடமுடியாது.

நோர்வே அரசு ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்காத நாடு என்ற ரீதியில் ஐரோப்பிய ஒன்றியம் நோர்வே அரசின் நிலைப்பாட்டிற்கு மாறான நிலைப்பாட்டை மேற்கொள்வது நோர்வேக்குத் தோல்வி ஆக மாட்டாது. அதாவது நோர்வே ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடாக இருந்து அதன் நிலைப்பாட்டிற்கு எதிரான தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொள்ளும் பட்சத்திலேயே அது நோர்வே அரசிற்குத் தோல்வியாகக் கருத இடமுண்டு.

ஆனால் இலங்கை சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாடு பாதிப்பை விளைவிப்பதாகவே இருக்கும். ஏனெனில் ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவானது நோர்வே அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகும்.

நோர்வே அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவு கிடைக்கும் / ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் கூறுவதினால் பயன் ஏதும் ஏற்பட்டு விடப் போவதில்லை.

ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் பௌத்த-சிங்கள பேரினவாத சக்திகள் நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்தே வந்துள்ளன. நோர்வே தூதுவராலயத்தை மூடி நோர்வேயுடனான இராஜீக உறவு முறைகளை முறித்துக்கொள்ளுதல் வேண்டும் என்ற அளவிற்கு எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இந் நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகள் ஐரோப்பாவிற்குள் பிரவேசிக்க அனுமதி வழங்க மறுத்துள்ளமையானது இனப்பிரச்சினை தொடர்பில் பௌத்த- சிங்கள பேரினவாத சக்திகள் வேறு எவரது கருத்திற்கும் செவிசாய்க்கவேண்டியதில்லை என்றதொரு நிலைப்பாட்டிற்கு வருவதற்கு வாய்ப்பை உருவாக்கிவிடும்.

வேறு விதமாகக் கூறுவதானால் நோர்வே அரசு மாத்திரமே மத்தியஸ்துவம், பேச்சுவார்த்தை என்று நியாயப்பாட்டைக் கொண்டுள்ளது போலவும், ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஒடுக்கு முறைக்குச் சார்பானதொரு நியாயப்பாட்டைக் கொண்டுள்ளது போன்றதானதொரு தோற்றப்பாட்டையும் ஏற்படுத்துவதாகி விடும். அதாவது தமிழ் மக்களின் போராட்டம் நிராகரிக்கப்பட்டு விட்டதான முடிவுடன் அவை செயற்படக்கூடும்.

இந்நிலையில் நோர்வேயின் கருத்துக்கள் புறம் தள்ளப்படுபவையாகவும், சமாதான முயற்சிகளுக்கு தாம் ஒத்துழைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது போன்றதொரு முடிவை பௌத்த- சிங்கள அரசியற் தலைவர்கள் மேற்கொள்ளுதல் முடியும். இம் முடிவானது சமாதான முயற்சிகளை நிச்சயமாகப் பாதிப்பதாகவே இருக்கும்.

ஆகையினால் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் விடுதலைப்புலிகள் தொடர்பான நிலைப்பாடு நோர்வே அரசை தோல்வியுறச் செய்துள்ளதாக அர்த்தம் கொள்ள முடியாது. ஆயினும், இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக சமாதான முயற்சிகளையும் அதில் நோர்வே சமாதான ஏற்பாட்டாளராக வகித்துவரும் / வகிக்கும் பாத்திரத்தைப் பலவீனப்படுத்தியுள்ளது எனத் துணிந்து கூற முடியும்.

ஆகையினால் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடு பௌத்த-சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு சார்பானதாகவும், இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வை பலவீனப்படுத்துவதாகவுமே கொள்ளமுடியும். ஒடுக்கு முறையாளர்கள் மீதான அன்றி ஒடுக்கு முறைகளுக்கான இடையூறுகளை நீக்கிவிட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளையே இன்னமும் ஆதரித்து நின்கின்றோம் எனக் கூறிக்கொள்வதால் சமாதானத்திற்கு எந்தளவிற்கு உதவி விடமுடியும்.

# தேர்தல் வன்முறைகள் நடைபெறலாமெனக் கருதும் 200 பகுதிகளில் 11 ஆயிரம் இராணுவத்தினர்!

சிறிலங்கா சனாதிபதித்தேர்தலின்போது வன்முறைகள் அதிகம் நடைபெறக்கூடும் எனக் கருதப்படுகிற 200 பிரதேசங்களில் 11 ஆயிரம் இராணுவத்தினரை ஈடுபடுத்துவதற்கு பொலிஸ் தேர்தல் பிரிவு தீர்மானித்துள்ளது. இப்பிரதேசங்களில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படும் பொலிசாருக்கு மேலதிகமாகவே இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுவர்.

கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் வன்முறைகள் நடைபெற்ற இடங்களை கருத்திற்கொண்டே இந்த 200 பிரதேசங்களும் இனங்காணப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களில் கலகமடக்கும் பொலிசாரும் உசார் நிலையில் வைக்கப்படுவார்கள் எனக் கூறப்படுகிறது.

இதனிடையே பிரச்சார நடவடிக்கைக்காக நாடு முழுவதும் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளையும், வைக்கப்பட்டுள்ள கட் அவுட்களையும் அகற்றுவதற்காக 80 இலட்ச ரூபாய் தேவைப்படுவதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பணத்தை தேர்தல் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தேர்தல் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# ஜே.வி.பி யின் பிரச்சார செயலாளரை கைது செய்ய நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சவைக் கைது செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரச சார்பற்ற அமைப்பொன்றின் இயக்குனரான கலாநிதி குமார் ரூபசிங்க நேற்று முன்தினம் தாக்கல் செய்திருக்கும் மனுவில், விமல் வீரவன்சவைக் கைதுசெய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவில், பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச, ஜே.வி.பி யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

1987ஆம் ஆண்டு முதல் 1992ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், ஜே.வி.பி யுடன் இணைந்து செயற்பட்ட தேசப்பிரேமி அமைப்பு போன்ற அமைப்புக்களால், ஆறாயிரத்து அறுநூற்று 57 படுகொலைகள் செய்யப்பட்டதாகவும் மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் ஜே.வி.பி அரசாங்கத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததால் அந்தக் கட்சியானது சனநாயகத்துக்கு எதிராகச் செயற்பட்டுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பௌத்த பிக்குமார், அரச ஊழியர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், தொழிற்சங்க வாதிகள், பேராசிரியர்கள், அதிபர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் இந்த அமைப்பினால் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் குமார் ரூபசிங்க தாக்கல் செய்திருக்கும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரதுங்கவைக் கொலைசெய்ததும் இந்த அமைப்பின் துப்பாக்கிதாரிகளே எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி யினர் சனநாயக நீரோட்டத்துக்குள் இணைந்து கொண்டுள்ளதாகத் தெரிவித்துவரும் நிலையிலும், அவர்களிடம் இருக்கும் ஆயுதங்களை அவர்கள் இன்னும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கவில்லையெனவும் குமார் ரூபசிங்க தனது மனுவில் கூறியுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் மகரகமவில் நடைபெற்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் மாநாட்டில் உரையாற்றிய ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச, தாம் பயங்கரமானவரெனத் தெரிவித்திருந்ததாகவும், இதனால் தமக்கு உயிராபத்து ஏற்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

எனவே ஜே.வி.பி யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவைக் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொலிஸ்மா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமெனவும் மனுதாரரான குமார் ரூபசிங்க மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சனாதிபதித்தேர்தலில் ரணிலை ஆதரிப்பது இ.தொ.கா வின் தற்கொலை முயற்சி

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரித்தால் அது அக்கட்சியின் தற்கொலை முயற்சி என்று சுதந்திரக்கட்சியின் தேர்தல் ஒருங்கிணைப்பாளர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

இது தொடர்பாக கொழும்பு ஊடகவியலாளர்களிடம் மங்கள சமரவீர கூறியதாவது:

இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் இணைந்து எமது தேர்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள விரும்பினோம். எமது நண்பர் ஆறுமுகம் தொண்டமான் என்ன முடிவை மேற்கொண்டிருக்கிறார் என்று எமக்குத் தெரியாது.

ஆனால் அந்தக் கட்சி இருந்தாலும் இல்லாவிட்டாலும் தோட்டத் தொழிலாளர் மத்தியில் சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரச்சாரம் குறிப்பிடத்தக்க அளவு முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

# சோமலிய தீவிரவாதிகளின் பிடியிலிருந்த கப்பல், பணியாளர்கள் விடுவிப்பு

### அமைச்சர் மங்களசமரவீர கருத்து

(கொழும்பு)

சோமாலியாவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற வேளை கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் சோமாலிய தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட உலக உணவுச் செயற்திட்டத்திற்குச் சொந்தமான கப்பலும் அதன் கப்டனான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.மகாலிங்கம் மற்றும் பத்து மாலுமிகளும் கடத்தல்காரர்களால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் விடப்பட்ட கப்பலுடன் அதன் கப்டனும், மாலுமிகளும் சோமாலியாவின் எல்மான் துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்தனர்.

இந்தக் கப்பலை தடுத்து வைத்திருந்தவர்கள் முதலில் பெருமளவு பணம் கேட்டபோதிலும் நேற்று முன்தினம் இதனை விடுவித்தபோது என்ன நிபந்தனையுடன் விடுவித்தார்கள் என்பது தொடர்பான தகவல் எதுவும் வெளியாகவில்லை.

# வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல வைத்திய சாலைகளிலும் கடமையாற்றும் வைத்தியஆய்வுகூடத் தொழிநுட்பவியலாளர்கள் நேற்று அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு சகல வைத்தியசாலைகளிலும் இடம்பெற்றுள்ளன.

தமது இந்த நடவடிக்கைக்கு உரிய பதில் கிடைக்கவில்லை என்றால் இன்னும் ஏழு நாட்களில் இதனைவிட கடுமை தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என வைத்திய ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர்களின் சங்கத்தின் செயலாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தமது தொழிற்சங்கத்தின் கோரிக்கைகள் தொடர்பாக சுகாதார அமைச்சருக்கு தெரிவித்தபோதும் அதற்கான பதில் எதுவும் அமைச்சரிடம் இருந்து கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (32)

# புதுக்குடியிருப்பு பிரதேச மக்களுக்கான மக்கள் கட்டுமான பயிற்சி ஆரம்பம்

## –ஆயிரத்திற்கும் அதிக மக்கள் பங்கேற்பு




படம்:- தவராட்ணம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேச மக்களுக்கான மக்கள் கட்டுமான பயிற்சி ஆரம்பவிழா நேற்று மாலை 4.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணியவித்தியாசாலையில் புதுக்குடியிருப்பு கோட்ட தேசியஎழுச்சிப் பேரவைச்செயலாளர் தா.சண்முகநாதன் தலைமையில் இடம் பெற்றது.

ஆரம்ப நிகழ்வாகப் பொதுச்சுடரினை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தா ஏற்றிவைக்க தேசியக்கொடியை முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து பயிற்சி இடம் பெற்றது. கருத்துரையை புதுக்குடியிருப்பு பரதேச செயலர் செ.தயானந்தா, மருந்தாளர் சங்கத்தலைவர் நாகேந்திரம் மற்றும் சிறப்புரையை முல்லை. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் ஆற்றினர்.பயிற்சியில் 1000இற்கு மேற்பட்டமக்கள் கலந்து கொண்டனர்.

இந்தப்பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து கருத்துரை வழங்கியவர்கள் குறிப்பிட்டனர். (08)

## அல்லைப்பிட்டியில் ஆணின் சடலம்

யாழ். தீவகம் அல்லைப்பிட்டிக் கடறகரையோரத்தில் ஆண் ஒருவரது சடலம் நேற்று மாலை 3.30 மணியளவில் கரையொதுங்கியுள்ளது.

அழுகிய உடற்பாகங்கள் உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய இச்சடலம் ஊர்காவற்றுறைப் பொலிசாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (33)

## இன்று பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் 24ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா இன்றும் நாளையும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சு. மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இப்பட்டமளிப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பிக்கின்றது.

இப்பட்டமளிப்பு விழாவில் 2375 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இதில் பட்டதாரிகளுக்கு யாழ். பல்கலைக்கழக வேந்தர் எம். சிவசூரியா பட்டங்களை வழங்கவுள்ளார்.

இரண்டு நாட்களுக்கு நடைபெறவுள்ள இப்பட்டமளிப்புவிழா பத்து அமர்வுகளாக இடம்பெறும் என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு. மோகனதாஸ் அறிவித்துள்ளார். (33)

# முன்பள்ளி ஆசிரியர்கள் இன்று கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 285 முன்பள்ளி ஆசிரியர்கள் கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை வளாகத்திலிருந்து இன்று காலை 9.30 மணிக்கு மங்கள இசையுடன் பிரதான வீதி வழியாக ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வைத்து முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## சிறார்கள்..

யடைய வேண்டும் எமது இளைய தலைமுறையினர் உடல், உள ஆரோக்கியத்துடன் இந்த தேசத்திலே உலாவவேண்டும். வளர்ச்சி அடையவேண்டும். என்பது எமது தலைவரின் எதிர்பார்ப்பு. எமது தலைவர் அவர்களின் விருப்புக்கேற்பவும் ஆலோசனைக்கமையவும் கல்வி, விளையாட்டுத் துறைகளை வளர்த்து வருகிறோம்.

கல்வி,விளையாட்டுத் துறைகளை இருக்கின்ற வளங்களைக் கொண்டு இயன்றவரை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். அதில் நாம் முழுமையடைந்தாகக் கூறமுடியாது.

எமது தேசத்திற்கான நிரந்தரமான தீர்வு வருகின்றபோது எமது இளைய தலைமுறையினரைச் சிறப்பாக கல்வி,விளையாட்டுத் துறைகளில் வளர்த்துச் செல்லலாம் என்ற பேரவா எமக்குண்டு.

ஆனால் இன்றுகூட ஒரு நெருக்கடியான காலமாக இருந்தாலும் எமது சிறார்களை ஆரோக்கியமான முறையில் வளர்க்கவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். குறிப்பாக சிறார்கள் கல்வி, விளையாட்டுத் துறைகளில் மிகச் சிறப்பான ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டுமென்பதில் எமது தலைவர் அவர்கள் பெருவிருப்பமாகவுள்ளார்.

தமிழர் தாயகத்தின் விளையாட்டுத் துறையினை வளர்தெடுப்பதற்கு அனைவரும் உழைக்க வேண்டும்.

இலங்கைத் தீவிலே தமிழர் தேசம் விளையாட்டுத் துறையில் முன்னணி வீரர்களாக வந்து உலக அரங்கில் பிரகாசிக்க முடியாத ஒரு இக்கட்டில் நாம் உள்ளோம். உலக அரங்கில் நாம் விளையாட்டுக்களை நிகழ்த்தக் கூடிய நிலைக்கு நாம் வரவேண்டும். விளையாட்டுத்துறை உட்பட அனைத்து துறைகளிலும் வளர்ச்சி கண்டு உலக அரங்கில் மிளிரவேண்டும்.

பூமிப்பந்திலே தமிழீழ தேசத்தினுடைய வீரர்கள் ஆற்றலுள்ளவர்களாக நிரூபிக்க வேண்டுமென்பது எமது தேசத்தின் கனவாகவுள்ளது.

அதனை நோக்கித்தான் எமது தலைவரும் எமது விடுதலையமைப்பும், எமது மக்களும் ஒரு அரசியல் போராட்ட மைதானத்திலே தீவிரமாக செயற்பட்டுக்கொண்டு வருகின்றோம்.

நாம் ஒரு போராட்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் வளர்ந்து வரும் எமது இளம் சந்ததிதான் எதிர்காலத்தில் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும்.

பல உயிர்களை விலையாகக் கொடுத்து கட்டியெழுப்பிவரும் எமது தேசத்தில் எதிர்கால சந்ததி மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்ற குறிக்கோளுக்காகத்தான் எமது தலைவர் அவர்கள் எமது விடுதலைப் போராட்டத்தை நகர்த்தி வருகின்றார்.

மலரப் போகின்ற தேசத்திலே எமது இளைய தலைமுறையினர் மகிழ்ச்சியாக வாழவேண்டும்.

உலக வீரர்கள் சங்கமிக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் தமிழ் தாயக வீரர்கள் வெற்றிகளை குவிக்க வேண்டும் என்பது எமது கனவாகவுள்ளது. அது நிறைவேற எமது தாயக வீரர்கள் உழைக்கவேண்டும்

விளையாட்டுத் துறையில் தமிழர் தாயகம் எதிர்காலத்தில் பலவெற்றிகளைக் குவிக்கவேண்டும். என்றோ ஒரு நாள் உலக அரங்கில் எமது அடையாளங்களை நிலைப்படுத்திக் கொள்ளக்கூடிய நாள் விரைவில் வரும்.

இன்றைய நிகழ்வில் கலந்து கொணடுள்ள வெற்றியீட்டிய வீரர்களை எமது தேசியத் தலைவரின் சார்பில் கௌரவிப்பதில் நாம் பெருமகிழ்வடைகிறோம் எனவும் தெரிவித்தார்.

## வீடியோ...

விட்டு வீட்டிற்கு செல்லப் புறப்பட்ட வேளையில் இனம் தெரியாதவர்கள் இவர் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு உந்துருளியில் தப்பிச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்டவரின் சடலம் நள்ளிரவு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சுன்னாகம் பொலிசாரினால் மரணவிசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டது. (41)

## நோர்வே..

இவ்வாறு நடைபெறும் பேச்சுக்களின்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் அரசியல் வேலைகளை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளமை, யுத்த நிறுத்த உடன்படிக்கை சீரான முறையில் அமுல்படுத்துவது போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி சந்திப்பில் நோர்வேத் தூதுவர் கான்ஸ்பிரஸ்கர் உள்ளிட்ட குழுவினர் பங்குகொள்வர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (லோ)

## துணைப்படை...

ஆரம்பமான நிகழ்வில் ஈகச் சுடரினை மாவீரர் கப்டன் சிதம்பரம் அவர்களின் சகோதரன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை மாவீரர் மேஜர். ஜேம்ஸ்சின் தந்தை க. உருத்திராபதி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து காவியமான வேங்கைகளுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. பொதுச்சுடரினை மாவீரர் சுதாவின் தந்தை முத்துச்சாமி ஐயரும், மாவீரர் மேஜர் கில்மனின் தாயார் சாம்பசிவமும் ஏற்றிவைத்தனர்.

அடுத்து திருவுருவப்படத்துடன் கூடிய நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் லெப். கேணல் குமரப்பாவின் திருவுருவப் படத்திற்கு குமரப்பாவின் பெரிய தாயார் திருமதி பசுபதி மலர்மாலை அணிவித்து ஆரம்பித்து வைத்தார். லெப். கேணல் புலேந்திரனின் திருவுருவப்பட்டத்திற்கு மாவீரர் கப்டன் பண்டிதரின் தாயார் மலர்மாலை அணிவித்ததைத் தொடர்ந்து ஏனைய பத்து மாவீரர்களது திருவுருவப்படங்களுக்கு அவர்களது உறவினர்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து காவியமான பன்னிரு வேங்கைகளுக்கும் பொதுமக்கள் மலரஞ்லி செலுத்தினர்.

நினைவுரைகளைப் பொது அமைப்புக்களின் பிரதிநிதி அ.ம. செபஸ்ரியான், மாவட்ட வைத்திய அதிகாரி க. மயிலேறும் பெருமாள், மாணவன் செந்தமிழ்ச்செல்வன், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாச செயலர் க. சூரியகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

மிகவும் உணர்வு பூர்வமாக மேற்கொள்ளப்பட்ட பன்னிரு வேங்கைகளின் நினைவு நிகழ்வில் வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று ஆயுதப் பயிற்சி பெற்றுவந்த தமிழீழ கடற்படையின் துணைப்படை வீரர்கள் வீரகாவியமான பன்னிரு வேங்கை களுக்கும் அணிவகுப்பு மரியாதை செலுத்தினர்.

உணர்வுபூர்வமாகவும், எழுச்சிகரமாகவும் இடம்பெற்ற பன்னிரு வேங்கைகளின் நினைவு நிகழ்வில் பலநூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சியில் மேற்படி பன்னிரு வேங்கைகளின் நினைவு நிகழ்வுகள் நேற்றுக்காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையச் செயலக வளாகத்தில் கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொருளாளர் கே.வீ.கே. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

இதேபோன்று புதுக்குடியிருப்பில் காலை 9.00 மணியளவில் புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் திருமேனி தலைமையிலும், பளை நகர்ப் பகுதியில் நேற்று மாலை 05.05 மணியளவில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலிலும், உடையார்கட்டு பிரதேசத்தில் உடையார்கட்டு மாவீரர் மண்டபத்திலும், மல்லாவியில் காலை 9.30 மணியளவில் மாவீரர் மண்டபத்திலும், முல்லை. நகர்ப் பகுதியில் முல்லை. நகர் வர்த்தக சங்கத் தலைவர் மனோ தலைமையிலும் நினைவு நிகழ்வுகள் இடம் பெற்றன.

மேலும் வவுனியா, புளியங்குளத்தில் காலை 9.30 மணியளவில் பன்னிரு வேங்கைகள் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்தியில் அமைந்துள்ள சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நினைவாலயத்திலும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நிர்வாகச் செயலகப் பொறுப்பாளர் குமுதன் தலைமையிலும் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து பொதுச்சுடரினை சிறப்புப் படையணியின் நிர்வாகப் பொறுப்பாளர் சிவாஜி ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை சாள்ஸ் அன்ரனி படையணி மருத்துவப் பொறுப்பாளர் சுடற்கதிர் ஏற்றி வைத்தார். திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் பொறுப்பாளர்களில ஒருவரான பாரத் ஏற்றி வைத்தா் மலர் மாலையினை மாவீரர் நினைவாலயப் பொறுப்பாளர் சங்கர் ஏற்றிவைத்தார். நினைவுரையினை சாள்ஸ் அன்ரனியின் சிறப்புப் படையணியின் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழரசன் ஆற்றினார். (கா,41,சோ,08, 11,19,24,20,21)

## கல்முனை...

ருக்கு கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இதனைத் தொடர்ந்து கல்முனைப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

முஸ்லிம் மக்களுக்கும் படையினருக்குமிடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது. தனியார் போக்குவரத்து சேவையும் சீர்குலைந்துள்ளது. அத்துடன் வீதிகள் வெறிச்சோடியுள்ளது.

## ரணில்...

பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது என தமது இறுதியான முடிவை வெளியிட்டார்.

கடந்த காலங்களாக யாரை ஆதரிப்பது என முடிவெடுக்க முடியாமல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தளம்பல் நிலையில் இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நேற்றுக் காலை தமது முடிவை அறிவித்த ஆறுமுகம் தொண்டமான் தாங்கள் இந்த முடிவுக்கு வருவதற்கு பல்வேறு காரணங்கள் இருப்பதாகவும், அத்தோடு தற்போது அரசாங்கத்தில் இருக்கும் தமது கட்சி அமைச்சர்கள் விரைவில் தமது அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகிவிடுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

## கடற்படை...

மறவன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு பயிற்சி ஆசிரியர் பூவண்ணன் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து பன்னிரு வேங்கைகளின் திருவுருப்படத்திற்கான ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டது. ஈகச்சுடரினை பெற்றோர்கள், போராளிகள், பயிற்சி ஆசிரியர்கள், தளபதிகள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து தலைமையுரை, நினைவுரை, சிறப்புரை என்பன இடம்பெற்றது. உரைகளைத் தொடர்ந்து தமிழீழ தேசியத் தலைவர் அவர்களுக்கான நினைவுக் கேடயம் வழங்கப்பட்டது. இக்கேடயம் தமிழீழ கடற்படையின் விசேட தளபதி சூசை அவர்களிடம் வழங்கப்பட்டது. தொடர்ந்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றது. (தீ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.